72



திருவானைக்காத் திருக்கோயில்.

27 JAN 1931

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௮ | மெய்கண்டான்யாண்டு-௭௱௮ மார்கழித்திங்கள் 1930ஆம் டிசம்பர்மீ 1931ஆம்—ஜனவரிமீ | பரல் ௧௨

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### திருக்குறுந்தொகை

“ பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகா ணெஞ்சமே
வண்டுலா மலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே.”

நெஞ்சமே=உள்ளமே (மனமே)

பண்டு செய்த=நீ முற்பிறவிகளிற் செய்த

பழவினையின் பயன்=பழைய தீவினையின் பலனாகிய துன்பத்தை

கண்டும் கண்டும்=இப்பிறவியிலே நுகருதலைக் கண்முன்னே பார்த்துக் கொண்டிருந்த போதிலும்

களித்தி=(இப்பிறவியிலே அந்தத் தீவினையையே செய்ய) மகிழ்கின்றாயே (அவ்வாறு மகிழ்தல் என்ன பேதைமை)

துயர் தீரவே=(நான் ஒன்று சொல்லுகிறேன் கேள்) இனி உனக்குத் துன்பம் வராமல் ஒழிதற்கு

வண்டுலா மலர்ச் செஞ்சடை ஏகம்பன்=வண்டுகள் சூழ்கின்ற பூக்களை

அணிந்திருக்கிற சிவந்த சடையை உடைய திருவேகம்ப பதியில் வீற்றிருக்கும் சிவபிரானுக்கு

தொண்டனாய்த் திரியாய்—பணி செய்யும் அடியானாகத் திரிவாயாக.

[illegible]=முன்னிலை யுரை அசைச் சொல். கண்டமே கண்டும்—அடுக்குச் சொற்கள். இந்தத் தேவாரப்பாவானது உயிர்கள் முற்பிறவிகளிற் செய்த தீவினையானது இப்பிறவியில் அவைகள் நுகரும்படி துன்பத்தைக் கொடுக்கின்றது என்ற உண்மையைக் கூறுகின்றது. மக்கள் தாங்கள் முற்பிறவிகளிற் செய்த தீவினையின் பலனாக இப்பொழுது உலக வாழ்வில் ஒரு புறம் துன்பம் நுகர்ந்து கொண்டிருக்கும் பொழுதே அத்துன்பம் எதனால் வந்தது என்று உள்ளத்தில் உணராமல் அதே தீவினையை மற்றொரு புறம் மகிழ்ச்சியுடன் பிற உயிர்களுக்குச் செய்து வருகிற பேதைமையைப் பார்த்து இரக்கங்கொண்டு சுவாமிகள் இப்பாட்டைக் கூறி அருளினார். சுவாமிகள் தமது நெஞ்சை நோக்கிக் கூறுகிறதாகக் கூறிப் பிற உயிர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

---

## An Adaptation of Gray's Ode on the Distant Prospect of Eton College.

# செவ்வந்தி மாநகரக் கல்லூரிப் பாட்டு.

[ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்]

## Introductory Note—முகவுரை

ஆங்கில மொழியில்வல்ல கிரே என்னு நல்லிசைப் புலவர், ஒரேஸ் உவால்போல் என்னும் முதன் மந்திரி புதல்வரோடு கேண்மை கொண்டு மற்றவரோடு ஐரோப்பாக் கண்டத்தின் தென் பகுதியில் யாத்திரை போனபோது, இடையில் அவர்க்குந் தமக்கும் மன வேறுபாடு நிகழ, அவரைப் பிரிந்து போந்து இங்கிலாந்து தேசத்திலுள்ள தமது நாட்டிற் சென்றிருந்தனும் யாத்திரை முடித்துத் திரும்ப; தந்நாட்டை யடைந்த ஒரேஸ் உவால்போல் என்பவர் கிரே என்னும் புலவரோடு



தம்மிடை நிகழ்ந்த அவ்வேறுபாடு தமது தகுதியிலொழுக்கத்தான் உண்டாயினதென்றும் இனி யதனை மறந்து தம்மொடு பெயர்த்துங் கேண்மை கொண்டொழுகல் வேண்டுமென்றும் கிரே என்னும் புலவரை யிரந்து கொண்டு ஒரு கடிதம் விடுப்ப, அதற்கு இசைந்து அவர் உவின்ஸர் என்னும் மலைக்கோட்டையிலிருந்த தந்நண்பரைக் காண்டற் பொருட்டுச் சென்றபோது தம்மெதிரே விளங்கித் தோன்றிய ஈட்டன் என்னுந் தாங் கல்வி பயின்ற கல்விக் கழகத்தையும் அதனை யடுத்துயர்ந்த உவின்சர் மலையையும் அதனடிவாரத்தோடும் தெம்ஸ் நதியையுங் கண்டு புனைந்து பாடியது இப்பாட்டென்ப. கிரே என்னும் புலவர் தந்நண்பர் உவால்போல் என்பவரோடு ஒருங்கு கல்வி பயின்ற கழகம் ஈட்டன் கலாசாலையாம். இக்கலாசாலை இங்கிலாந்து தேசத்திற் செங்கோலோச்சிய என்றி என்னும் புகழ் மன்னராற் கி. பி. 1440-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. உவின்சர் என்பது ஒரு சிறு குன்று; அதன் குவட்டியிலியற்றப்பட்டுள்ள கோட்டையானது இங்கிலாந்து தேசத்து அரசர் இனிது வாசஞ் செய்வதற்கு ஏற்ற உறையுளாகப் பயன்படுவது.

இனி இவ்வரிய பாட்டைக் கிடந்தவாறே யெடுத்துக் கொண்டு மொழி பெயர்ப்பின் பூகோள சாத்திரப் பயிற்சி தேறாத செந்தமிழ் மொழியில் வல்ல எம்பெரு முதுமக்கள் இப்பாட்டின்கட் காணப்படும் ஊர்ப்பெயர் இடப்பெயர் யாற்றின் பெயர் மலைப்பெயர் முதலாயினவற்றுள் ஒன்றுதானு மறிய மாட்டாமையின் மனவெழுச்சி குன்றியதனைப் பயிலாது போகடுவாராதலானும், பிறபாடைச் சொற்கள் தன்னகத்து விரவி வருதலாற் றன்னழகிழந்து சுவை வேறுபட்டுக் காட்டுஞ் செந்தமிழ் மொழியில் அச்சொற்களை மாட்டிவிட்டு வழங்கல் வடுச்சொற் கேதுவாமாகலானும், சிங்கள முதலிய பிறபாடைச் சொற்களெல்லாங் கலந்து வழங்குந் தமிழ் மொழியை யவற்றொடு படாது வழங்குந் தூய்மை யுடைத்தென்ற லெலாதாமென்பார்க்குச் சிங்கள முதலிய பிறபாடை மாக்கள் தம்மொடு கலந்து பழகுங்கால் அவர் சொற்களை எடுத்துக்கொண்டு தமது தமிழ் வழக்குக் கேற்குமாறெல்லாந் திரித்து உரை நிகழ்

துந் தமிழ் முதுமக்கள் செந்தமிழியல் வழக்குப்பற்றி வரும் திறம் போலாது எமக்கு வேண்டியவாறெல்லாம் பிறபாடைச் சொற்களைத் தமிழ் மொழியிற் புகுத்தி வழக்கியல் வேறு படுத்தல் உலகநெறியொடு மாறுபடுமாதலானும் இப்பாட்டின் ஒழுகலாற்றிற் கியையத் திரிசிரபுரம் என்று வழங்குஞ் செவ்வந்தி மாநகர்க் கலாசாலையைப் புனைந்து பாடியதாக இதனைத் தமிழில் மொழி பெயர்த்திட்டாம். என்னை? முதனூலிலுள்ள ஈட்டன் கலாசாலைக் கேற்ப ஸெண்ட் ஜோஸப் கலாசாலை எஸ். பீ. ஜி. கலாசாலையும் உவின்சர் என்னுங் குன்றிற்கு ஏற்பத் தாயுமானவர் மலையும், உவின்சர் அடிவாரத்தோடும் தெம்ஸ் நதிக்கேற்ப தாயுமானவர் மலையடிவாரத்தினோடுங் காவிரியாறும் இந்நகரிடைக் காணப்படுதலான் என்பது. அற்றேல், ஈட்டன் கலாசாலையைப் போலவே இந்நகரிடைக் கல்விக் கழகங்களும் ஆங்கில மொழிப்பெயர் பெற்று நிலாவுதலின் அப்பெயர்களை யிப்பாட்டின்கட் புகுத்தி நடவல் வழுவாம் பிறவெனின், நன்று சொன்னாய், அங்ஙனமாட்டி விடினன்றே வழுவாம், முதனூலில் ஈட்டன் கலாசாலைப் பாட்டென்று தலைக் குறியீடு தந்ததன்றி அப்பெயர் பாட்டின்கட் டந்து வழங்கப் படாதவாறு போலக் கல்விக் கழகமென்றன் மாத்திரைக்கன்றி அப்பெயர்களிதனுட் டந்து வழங்கப்படாவென்பது காண்க.

இனிக் கிரே என்னும் புலவர் முதிர்ந்த செய்யுட் புலமை மாட்சி கைவரப்பெற்று உலகியற் பொருணெறி முழுதுணர்ந்து பெருநலஞ் சுவைப்பச் செய்யுளிடைக் கொளுவி இனிது மிழற்றுமாறும், கழகத்திடைக் கல்வி பயிலுஞ் சிறு குறுமாக்களியல் புணர்ந்து கூறுமாறும், பின் அச்சிறார் தமக்கு வருந்துன்பங்களை யெல்லாந் தொகுத்து இரக்கந்தோன்ற கிளக்குமாறும் பிறவும் பெரிதும் நன்கு மதிக்கப்படுவனவாம். அவற்றுள், முதல் ஐந்து செய்யுட்களில் தம்மெதிரே அழகொளிர நிவந்து சேணோக்கும் கல்லூரியின் கொடுமுடியினையுங் கோபுரத்தினையும் விளித்து நீவிர் இள மரக்காவின் வளமுறு நிழலையும் குறுமரக் காட்டின் நறுமலர்ப்பரப்பையும் செழும் புன்னிலத்தின் கொழும் பொழி தழையையும் ஊடுருவிச் செல்லும் காவிரியாற்றினையும்



தீழ்னை யடுத்துயர்ந்த நிலப்பரப்பையுங் காண்பீரென்றும், பிள்ளைமைப் பருவத்தே திரிந்தாடுவதற் கிடமாயிருந்த குன்றுகள் மரநிழல்கள் வயல்களாகிய இவற்றை விளித்து நும்மிடத்தினின்று மெல்லிதின் வீசுந் தென்றற்காற்று எமதிளைப்பை நீக்கிஎம்முயிருறு துயர் நீங்க ஆறுதல் சொல்வதுபோலவும் கழிந்த எமதுஇளமைப் பருவத்தையும் மகிழ்ச்சியையுந் தருவதாகிய ஓரிளவேனிற் பருவத்தைப் பெயர்த்தும் வருவிப்பது போலவுமுலாவுமென்றுங் கூறுமாறு காண்க; பின் இரண்டு செய்யுட்களிற் காவிரியாற்றை விளித்து 'அன்னாய்! புல் வளர்ந்த நின் பசிய கரையிடத்தின் முன் விளையாட்டயர்ந்த சிறுவர்களுள் நின் திரையைத் தமது திண்டோளாற் கிழித்து நீந்தினாரெவர்?' என்றும் வினவுதல் காண்க; பின்னிரண்டு செய்யுட்களிற் கல்விக் கழகத்திற் பயிலுஞ் சிறாரிற் சிலர் தாம் புறம் போய் விளையாடுங் காலத்தை நினைந்துகொண்டு முணுமுணுவென்று பாடஞ் சொல்லுதலும், அங்ஙனங் கழகத்தினுள்ளிருந்து பயிலுதற்கு அமையாது துணிந்த வேறு சிலர் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடுதலுங் கூறப்பட்டது காண்க; பின் மூன்று செய்யுட்களில் அச்சிறார் பலவற்றை அடைதற்கு விரும்புதலும் விரும்பிய பொருளெய்தியதும் அதன்கண் அத்துணை விருப்பஞ் செய்யாமையும், ஒரு கணத்திற்றோன்றிய இடரை அவர் மறுகணத்தின் மறுத்தலும், அவரது கட்டிளமை யெழிலும், செய்தொழின் முயற்சியும், நுண்ணிய அறிவும் களிப்பும், கவலையின்மையும், நாளைவரு துன்பங்களை நினையாமையும், பிறவுங் கூறப்படுதல் காண்க; பின் இரண்டு செய்யுட்களில் அச்சிறார் தம்விதி நினையாமலிங்ஙன மகிழ்ந்து விளையாட இடர்களெல்லாம் அவரை யுணவு கொள்ளுதற்குப் படை குழுமி நிற்குமாறும், அந்நிலையை யறிந்து 'காவிரியென்னு நங்காய்! நீயேனும் அச்சிறார் தமக்குச் சொல்லாயோ?' என்றுரைக்குமாறுங் காண்க; பின் ஏழு செய்யுட்களில் அவரை வருத்துந் துன்பங்களின் தொழிற்கூறுபாட்டை விரித்துக்கூறுதல் காண்க; பின் இறுதியிற் கிடந்த செய்யுளில் 'அச்சிறார் தமக்கு இப்போது நுகரு மின்பங்களெல்லாம் விரைந்து கழியத் துன்

பங்கள் கடுகிவருதல் ஒரு தலையாகலான் அவர் நாளை வருமிடரை நினைந்து இன்று துய்க்கு மின்பத்தினையும் இழத்தல் வேண்டா' என்றும் 'அறியாமையே யின்பம் பயக்குமெனின் அறிவுகொண்டு பிதற்றுதல் மடமையாம்' என்றும் உறுதி மொழிந்து முடித்தவாறு காண்க.

இங்ஙனமிப் புலவரமைத்தியற்றிய சொற் பொருணயங்களு நுட்பங்களுங் கற்றார்க்கெல்லாங் கழிபேரின்பம் பயக்கு நீரவாகலின், அவை தம்மைத் தமிழ்ச் செய்யுளால் மொழி பெயர்த்துத் தமிழ் வழக்குக் கேற்பச் சில பொருள் கூட்டியும் வேறு சில கழித்தும் மற்றுஞ் சில திரித்தும் முதனூற் பொருளொருமை கெடாது இயன்றவளவு தமிழ்ச் செய்யுட்களைச் சுவைப்படுத்தியும் எழுதினும். இன்னும் இவற்றின்கட் சொற்பொருணயங்களைத் திருத்திப் பொலிவு செய்யவல்ல அருமைகள் இதனை நோக்கும் அறிவுடையோ ரறிவாராயின் அவற்றை எமக்கு அன்பு கூர்ந்து தெரிவித்துக் கடமைப் படுத்துவாராக.

"மக்களாதலே துக்கவேதுவாம்."—உறுதிமொழி.

மாண்கலைதந் தலைவர்செயு நன்றிதனை மதித்தவர்தங்
காண்பினிய தூநிழல்சேர்ந் தினிதிருப்பக் கரும்புறழ
வூண்சுவைக்குங் காவிரிபாய் சூழலெலா மொளியுறத்திச்
சேண்பொலியுங் கொடுமுடிகாள் பண்டுபொலி சிகரிகாள். க

இளங்காவின் கொழுநிழலு மிறும்புதரு நறுமலரும்
வளங்கெழுபுன் னிலப்பொழியும் வடிந்தோடும் வெள்ளியெனத்
துளும்புபுனற் காவிரிதான் சுழன்றுசெலத் திகழ்மலையின்
விளம்புறுதற் கீழ்விளங்கு வெளியெலாங் காண்பீரால். உ

(க) என்றி என்னு மன்னர் ஈட்டன் கல்லூரி யமைத்துக் கல்வி வளம் படுத்து நிறுத்தலின் அந்நன்றியறிந்து அவர் தந்த அந்நீழலிலிருந்துகொண்டு கலைகளெல்லாம் அவரை வழுத்தும் என்று முதனூலிற் கூறப்பட்டதற் கிணங்கச் செவ்வந்திக்கல்லூரிகளிலும் அவ்வாறு கலைகள் தந்தலைவர் செய்நன்றியை மதித்து இனிதிருக்கு மெனப் பட்டது. சூழல்—இடை வெளிகொண்டு சுற்றிலும் மரமடர்ந்தசோலை, Glade, கொடுமுடி-Spire, சிகரி-Tower.

(உ) இறும்பு-குறுமரக்காடு, பொழி-புற்பற்றை, Turf. உலையில் உருக்கி வடித்த வெள்ளிபோல நீர் துளும்பி யோடுங் காவிரியென்க. கொடுமுடிகளுஞ் சிகரிகளும் மலையினுந் தாழ்ந்த உயர முடையனவாதலால் அம்மலைக் குவட்டின் கீழ் விளங்கு நிலப்பரப்பெல்லாங் காண்பவெனப்பட்டது.



இலங்கவலை யாமாகி யினைதலறி யேமாகிப்
புலம்பெருகாப் பிள்ளைமையிற் புகுந்துதிரிந் தியாமாடு
நலம்பெருகு குன்றுகாள் விழைவுதரு நன்னிழல்காள்
பலன்றிரியப் பெருங்காதல் கொளுவியநற் பழனங்காள். ங

மெல்லிதினும் மிடனின்ற வீசுகா லெமக்குமிலை
யில்லின்பந் தந்ததம திருஞ்சிறையை மகிழ்சிறப்ப
வொல்லெனநன் கொழுப்புதொறு முயங்குமுயிர்க் குறுதிமொழி
யல்லலறப் புகன்றெம்மை யாற்றுவிப்ப தெனத்தோன்ற. ச

ஒருங்குபொதுண் மலரவிழ புயர்மணமுஞ் செழுந்தாது
நெருங்கியளைந் தெழுந்தினிது நெடுவிசும்பிற் சிதர்தோறும்
பெருங்களிபு மிளம்போதும் பெருக்குமோ ரிளவேனி
றருங்குறிய தெனத்தயங்குந் தன்மையெலாங் காண்மோல். ரு

காவிரியென் றுரையன்னுய் களியயருஞ் சிறுவர்குழாம்
பூவிரிபைங் கரைமருங்கு பொருந்தி விளையாடியவா
றேவிலரா யின்பநெறி யுறதலெலாங் காணலையினுற்
றுவுகொழுந் தோளினெவர் நடக்குதிரை யிடைபோழ்வார். சு

இசைமிழற்றும் பூவைதமை யிரும்பொறியிற் சிறைப்படுத்து
நசையுடைய ரெவரிருப்பு நவில்வளையந் தூர்ந்துசெலும்
வசையுடைய சோம்பலுள முடையரெவர் வரிப்பந்து
விசையுடனன் கொழுந்தோட விடுகுநர்மற் றெவருரையாய். எ

(ங) 'கவலையிலமாகி' என்க. இனைதல்-வருந்தல், புலம் பெருகாப் பிள்ளைமை-அறிவு நிரம்பாத பிள்ளைப் பருவம். விழைவு-விருப்பம், பலன்றிரிய-பலனின்றி, தம்மோடுடன் பயின்ற உவெஸ்டு என்னும் அரிய நண்பர் இறந்து பட்டமையின் கிரே என்பவருக்கு இவை பயனிலவாகக் காணப்பட்டன. கொளுவிய-உண்டாக்கிய. பழனம்-வயல், சிறார் விளையாடு மிடனெனினுமமையும், Field.

(ச) கால்-காற்று. உயங்கும்-இளைத்த. வாடிய. அல்லல்-துன்பம்.

(ரு) இச்செய்யுள் முதலடியிரண்டும் முதனூலில்லன வாயினும் செய்யுளும் பொருளும் நிரம்பல் வேண்டிப் படைத்து எழுதப்பட்டன. பொதுளல்-நிறைதல், தாது-மகரந்தம். களி—மகிழ்வு.

(சு) முதனூலாசிரியர் தெம்ஸ் நதியைத் தந்தையென வழைப்பராயினுஞ் செந்தமிழ் வழக்குக் கேற்பப் பெண்பாலாக வுரைக்கப் பட்டது காவிரியாறென்க. ஆடியவாறு-ஆடியபடியே. கொழுந்தோள்-Pliant arm. திரை-அலை. போழ்தல்-இருகூறாக்குதல்.

(எ) மிழற்றல்-பாடல். பூவை-நாகணவாய்ப்புள். இதனை இக்காலத்து 'மயினு' என்று வழங்குப. முதனூலிற் கண்ட லின்னெட் (Linnet) என்னும் இசையறி பறவைக்கேற்ப ஈண்டுப் பூவை எனப் பட்டது. பொறி-கண்ணி Trap. வளையம்-Hoop.

அருந்தொழிலிற் புகுந்தனரா யவர்சிலவர் புறந்திரியத்
திருந்துபொழு தினிதாக்குஞ் சிந்தனைசால் காலைகளி
விருந்துதம முறுமுறுக்கு மிரும்பணியி லீடுபடப்
பொருந்துமுள மிலர்வேறு துணிவுடைய புன்சிறார். அ

வரம்புடைய தமதுகுறு நிலவாட்சி மனவெறுப்பப்
பரம்புபுற நிலமுழுதும் பார்த்துமென வோடுதொறுஞ்
சிரந்திரும்பிப் புறநோக்கச் சிவணுவளி யுளர்தோறும்
புரம்பரவு குரல்கேட்பப் பொருந்துவெருக் களிகொள்வார். கூ

களியளைந்த நம்புநசை கருதுமா றரங்கொளினு
மெளிதடைந்த பொழுதவர்தாம் விரும்பலிலா வியல்பினர்
துளிவிழியி னுகுதலுமே தோன்றும லதுமறப்பார்
தெளியிளமை யொளிவிளங்குந் திறமுடைய தன்மையார். ௰

செழுமுளரி யிதழ்வண்ண வெழில்வயங்கு திணிநலமு
மெழுநாள்க டொறும்பெருகு செய்திறமு மின்னுத
கொழுமதியு மதுகைதரு கொழுங்களியுங் கவல்வதிலாப்
பழுதுகெடு பகற்பொழுதும் பரிவில்லாக் கங்குலும. கக

தாளாண்மை தூயனவுந் தயங்குகதிர் நான்விடியல்
வாளாது கழிந்துவிடு மின்றுயிலு மற்றுமெலா
நாளாலு முடையசிறார் நாளைவரு தீதுள்ளார்
நீளாத கவலையெலா நிகழ்நாண்மேற் பிறிதில்லார். கஉ

---

(அ) வெளியே திரிவதற்கென்று குறித்தகாலத்தை இனிதாக்கும் பாடவேளை என்க. சிறார்பாடம் பயிலும்போது முணுமுணுவென்று ஒலித்தலின் அவ்வாறு கூறப்பட்டது. பணி-வேலை, ஈடுபடல்-அறிவு செலுத்துதல்.

(கூ) ஆட்சி-ஆளுகை சிவணுவளி-மெய்யிற் படுங்காற்று, உளர்தல்-அசைதல். புரம்பரவு-பக்கத்தே பரவிவரும். வெருக்களி-அச்சத்தொடு கூடிய மகிழ்வு.

(க௦) அளைந்த-கலந்த. நம்பு நசை-ஒன்றனைப் பெறுதற்கு எதிர் பார்த்திருக்கும் அவா. உரங்கொளல்-வலிமைப்படல் ஓரும் பொருள் பெறவிரும்பினர் அப்பொருள் பெறுதற்கு முன்னரே அதனைப் பெற்றார்போல நினைந்து மகிழ்தலும், அதனை யெளிதிலடைதலும் அதன்கண் அத்துணை விருப்பஞ் செய்யாமையும் வழக்கிற்கண்டு கொள்க. 'துளி விழியிலுகுதல்' துன்பக் குறிப்பு.

(கக) முளரி - தாமரை, முதனூலில் ரோஸ் என்பதற்கேற்பஇஃது ஈண்டுப் பொருத்தப்பட்டது. முறுக்கவிழ்ந்த தாமரை யிதழ்போலும் இளமை யழகு வாய்ப்பப் பெற்றவரென்பதாம். கொழுமதி - நியவழிப் படு நுண்ணறிவு, Wild wit. மதுகைதரு-மெய்வலியாற் பிறந்த. கவல்வு-கவலை, பரிவு - துன்பம்.

(கஉ) தாளாண்மை - Spirit. கதிர் - ஞாயிறு. விடியல் - காலை.



அழிவுதரும் விதிவினையா ரதற்கிரையாய் விளையாடப்
பழிவிதியி னுழையோரும் பாழ்வினையின் கொல்படையு
மொழிசிறுவர் தமைச்சூழ முதிர்ந்துகடி கொளுமாறு
விழிகொடுகொ ணுதிநங்காய் விளங்குபெறு வளமுடையாய். கங

சிறுதுற்றி னிடைமறந்த சிறுவர்தமை புணவுகொளக்
கறவுடனக் கொல்படைதான் காவலொடு முறுநிலையை
மறவின்றி வயங்குபுகழ் மருவுடையாய் மற்றவருக்
குறுதிபுறக் காட்டியவர் மக்களென வுரையாயோ. கச

மார்தருளங் கொழுதிபுணும் வல்லெருவை தமைப்போல
வீர்ந்தவரைப் படுவிக்கு மின்னுத கொடுங்காதல்
காந்துசினம் விளர்வெருவு காந்தியங்கு கழிநாண
மேர்துமெழின் மெலிவிரக மிளமையெலாங் கழிக்குமால். கரு

அவ்வியத்த னெயிறதுக்கி யாழ்நெஞ்சி னகங்கறிப்பச்
செவ்விதலா வழுக்காறுந் திறங்குழைக்கும் பெருங்கவலு
மொவ்வலிலா வலிக்குமுகத் தெளியாத வுள்ளுடைவு
மெவ்வமதின் கூர்ங்கணையு மிடைபுருவி யடையுமால். கசு

பேராசை யொருசிலரைப் பிறங்கியெழ நனிகடவி
யோராவல் வேழையரை யுடன்சுழற்றி யிளிவினிலுஞ்
சேராத விதழ்வினிலுஞ் செலப்படுத்துத் திரிதரவுந்
தீராத பொய்ம்மையெனுந் தெறுக்காலிற் கோட்பட்டார். கஎ

---

(கங) விதியின் உழையோர் — ஊழ்வினையின் மந்திரிகள். முதிர்ந்து - சூழ்ந்து, கடிகொளல் - காவல் கொள்ளல். நங்கை-காவிரி யென்னு நங்கை.

(கச) துறு-பதுங்கியிருத்தற்கு உபகாரப்படுங் குறியபுதல். கறவு-வைரங்கொளல். ஈண்டுக்காவிரி விளிக்கப்பட்டது காண்க. மக்களாய்ப் பிறத்தலேதுக்கவேதுவாமென்னும் உறுதிமொழியிற் போந்த பொருள் ஈண்டு வலியுறுக்கப்பட்டது காண்க.

(கரு) கொழுதி-மூக்கினுற்கோதி. எருவை-ஒருவகைப் பருந்து. ஈர்தல்-பிளத்தல். காந்துசினம்-அழலும் கோபம். விளர்வெருவு-வெள்ளிய அச்சம். அச்சமுடையார்க்கு மெய் வெளுத்தலினிவ்வாறு சொல்லப்பட்டது. காந்து-ஒளிந்து. கழி-மிகுந்த. ஏந்தும் எழில்-மிக்க அழகு.

(கசு) அவ்வியம்-Jealousy. எயிறதுக்கல்-பற்கடித்தல். கறித்தல்-கடித்துணல். குழைத்தல்-தளாவித்தல். முகஞ்சுளிக்கச் செய்யும் மனத்தளர்வென்க. எவ்வம்-துன்பம். இடைபுருவல்-நடுவு நுழைதல்.

(கஎ) பிறங்கி-உயர்ந்து. கடவி-வலியச் செலுத்தி. சேராத-சிறவாத இப்பொருட்டாதல் ஆசிரியர் நக்கீரனர் களவியலுரையிற் காண்க. தெறுக்கால்-தேட்கொடுக்கு. கோட்படல்-கொள்ளப்படுதல்.

அன்பையும் திண்ணனாரின் அன்பையுஞ் சீர்தூக்கி அன்புண்மையில் அவர் தலை சிறந்து நிற்றலையும், அன்பின்மையில் தாம் தலை சிறந்து நிற்றலையும் விளக்குதற்குக் "கண்ணப்ப னொப்பதோரன்பின்மை" என அடிகள் கூறியருளினார் என முடிந்தமை காண்க.

இங்கு, மணிவாசகரையும் கண்ணப்பரையுஞ் சீர்தூக்கி யார் பெரியர்? யார் சிறியர்? என்று செய்த ஆராய்ச்சி அன்று இது என்பதையும், பெற்றும் பெறுதாரைப்போல வருந்தும் பெரியாரிலக்கணத்திற்றலைநின்ற நமது அடிகளின் கருத்துக்கு இது சாலுமென்பதையும் அன்பர்கட்கு நினைவூட்டுகின்றேன்.

இனி, அடிகள் 'யான் அன்பின்மையிற் றலைசிறந்தவன்' எனத் தம்மைக் கூறியதன் கருத்து என்னவென்பதை ஆராய்வோமாக.

பரந்த இந்நிலவுலகின்கண் இறந்தகாலத்திற் பல பெரியார்கள் பல மதங்களிலும் பல நாடுகளிலும் பல மொழிகளிலும் இருந்தனர் என வரலாற்று வாயிலாக அறிகிறோம். நிகழ்காலத்திலும் தந்நல மறுப்பும் வீரவுணர்ச்சியுமுள்ள பெரியார் பலரைக் காண்கின்றோம். எதிர்காலத்திலும் அவர்கள் தோன்றுதலமையும். எனவே, முக்காலத்தினும் ஒத்தியல்கின்ற இவர் தம் பெருமை ஒரே தன்மையதாகவோ, அன்றிச் சிறிது ஏற்றத் தாழ்வுடையதாகவோ இருக்கலாம். எனினும் அவர்கள் மேற்கொள்ளும் நெறி ஒன்றன்று; பலவாகலாம். இதனை வாய்ப்புழிப் பின்னர் விரிப்பாம். ஆகவே அவர் தம் குறிக்கோளும் சிறப்பும் வேறுபடாமல் நெறிகள் வேறுபடுமென்பது பெற்றும். இவ்வாறு நோக்குழி நமது அடிகளுக்கு ஏற்றம் வந்ததின் காரணம் ஆண்டவனடியின்கண் அவர் வைத்த மெய்யன்பு ஒன்றே தான். இதனைத் துறவு நெறியாற் பெருமை பெற்றவராகக் கருதி, "பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல், ஆருந்துறக்கையரிதரிது" எனத் தாயுமான அடிகளாற் போற்றப்பட்ட முற்றத்துறந்த பட்டினத்தடிகள் தாமியற்றிய திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில்,



"வித்தகப் பாடன் முத்திறத்தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்"

எனக் கூறி விளக்கியருளினர். உமாபதி சிவனார் கூறியருளியதாக வழங்கும்,

"வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்னும் வெண்பாவில் நமது அடிகள் வேறு பெயரின்றி "அன்பர்" என்றே கூறப்பட்டமை காண்க.

இன்னும் 'கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்' என்னும் நூலின்கண் நம்பியாண்டார் நம்பிகள்,

"வருவாசகத்தின் முற்றுணர்ந்தோனை வண்டில்லை மன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார்தரு திருக்கோவை கண்டேயுமற்றப் பொருளைத்
தெருளாதவுள்ளத் தவர்கவிபாடிச் சிரிப்பிப்பரே"

என அடிகளைச் "சிவ பாத்தியன்" என்றே கூறுவதும் நோக்கத் தக்கது. சிவபாத்தியன்—சிவபிரான் திருவடியில் அன்புடையவன்; என்பது பொருள். மணிமேகலை மந்திரங் கொடுத்த கதையில் 'பகையறுபாத்தியன்' என வருதலும், "பாத்தியன் - (புத்தனுடைய) பாதத்திற்கு அன்பன்; 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' என்பதில் 'பாத்தியன்' என்பது இப்பொருளில் வருதல் காண்க." என்னும், தமிழ்க்கடலன்ன உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் உரையும் காண்க.

கற்பனைக் களஞ்சியமாகிய சிவபபிரகாசஅடிகள் "வலம்புரி கிடக்கும் வாதவூரன்ப" எனவும், "செய்யவார் சடைத்தெய்வ சிகாமணி, பாதம் போற்றும் வாதவூரன்ப" எனவும் அடிகளை விளிக்கின்றார்.

இன்னும், 'அடிகள் ஓர் பெரிய அன்பர்' என்னும் உண்மையை வலியுறுத்தற்கு அவரியற்றியருளிய திருவாசகம் ஒன்று போதாதோ. பிற சான்றும் வேண்டுமோ, "திருவாசகத்தி

பிறருக்குத் தோன்றும் ஐயந்தமக்குத் தோன்றப் பெற்று அதற்கு விடையிறுத்துச் செல்வாரே யன்றித் தாம் அகப்பட மாட்டாராதலின் என்க. அவ்வகையில் அவர்கள் இற்றைநாள் வழக்கறிஞர் சிலரும் மருத்துவர் சிலரும் போல்வர் ; எங்ஙன மெனின், வழக்கறிஞர் சிலர் தாம் மேற்கொண்ட வழக்குத் தோல்வியுற்றதாயின், வழக்காளியை நோக்கி, 'யான் அந்த மூன்றுவது சான்று வேண்டாமென்றேன். நீர் கேட்கவில்லை ; அதனாற்றான் வழக்குத் தோற்று விட்டது' என்பர் ; இஃது வழக்கு மன்றங்களில் தம் வாணாளைப் போக்குவதே பிறவிப் பயன் எனக் கருதிப் பேதுறும் பேரறிஞர் பலரறிந்த தொன்று.

இனி, மருத்துவரிற் சிலர், தம்மாற் பார்க்கப்பட்ட ஆதுரராவி ஆக்கையை விட்டகலுதற்கு அறிகுறியாகக் கழிந்த மலத்தை நோக்கி, உடனே கையைப் பிடித்து நாடியைக் கூர்ந்து பார்ப்பார் போன்று நடித்து, விரலாற் பூமியை மும்முறை தட்டிவிட்டு 'இவ்வளவு நேரமாயிற்று எமது மருந்து வேலை செய்ய' என்று கூறுவார். சிறிது நேரத்திற்கெல்லாம் நோயுடையார் வேறுதாய் நாடிச் சென்று விடுவர். அது போது அம்மருத்துவர் அங்குள்ளாரை நோக்கி, "எமது சொற்படி நடக்காமல் ஏதோ அபத்தியஞ் செய்து விட்டீர்க"ளென்பர் ; இவ்வுண்மையைப் பெரிய நகரங்களில் சிறிது வருவாய் பெற்றுக்குறைந்த குடிக்கூலியை யுடைய வீட்டில் வாழும் வியத்தகு நலமுடையோரறிவர். எனவே, அவ்விருவரும் எவ்வகை யினும் தாம் அகப்பட்டுக் கொள்வதேயில்லை. அங்ஙனமே நமது புலவர் பெருமக்களும் அகப்படமாட்டார் ; எனினும் இருபகுதியாருக்கும் பொய்ம்மையாலும் மெய்ம்மையாலும் வேறு பாடு உண்டு.

நமது இராமலிங்க அடிகள் மேற் காட்டிய செய்யுளில் 'கேட்ட பொழுது' என்று கூறியதே அந்த ஐயத்தை நீக்குதற்குப் போதிய கருவி என்க. எனவே அவ்விலங்குகள் மெய்யறிவு பெற்றனவானால் திருவாசகத்தைக் கேட்டன வென்றும், பெறவில்லையானால் அதனைக் கேட்கவில்லை என்றுங் கோடல் வேண்டுமே யன்றித் திருவாசகத்திற்கு அவ்வாற்றலில்லை யென்று கோடல் இழுக்கென்பது அவர் கருத்தென்க.



ஆயின், "விலங்குகள் கேளாதிருக்குமோ" எனின், நண்பரிருவர் எதிரெதிரிருந்து செய்திகள் பேசுங்கால் ஒருவர் மற்றவரை நோக்கி "நமது நினைவு இங்கில்லையோ, யான் இது போது என்ன சொன்னேன் ; சொல்லும் பார்ப்போம்" என்றாராயின், மற்றவர் "ஆம் ஆம் ; யான் எங்கேயோ இருந்து விட்டேன் ; என்னை மன்னித்து இன்னொரு முறை சொல்ல வேண்டும்" என வேண்டிக் கோடலைக் கண் கூடாகக் காண்கின்றோமாகலின், விலங்குகட்கு அஃது இயல்பே யென்க.

இனி, "வான் கலந்த" என்று தொடங்கும் பாட்டிலும் "திருவாசகம் பாடினால் இனிக்குமோ" என வினவுவார்க்கு "நான் கலந்து" என்பது விடையாக இருத்தல் காண்க.

இனி, சிவப்பிரகாசரும் தாம் பாடிய 'விளங்கிழை பகிர்ந்த" என்னும் பாவில் "கேட்போரனைவரையும் அன்பராக்கி விடுமோ அவ்வாசகம்" என ஐயவினா எழுப்புவார்க்கு "அன்பராகாதவர் மக்களினத்தைச் சார்ந்தவரல்லர்" என்னும் பொருள் தோன்ற "மண்பதை யுலகின் மக்களையரிலர்" என விடை யிறுத்ததூஉ மென்க. (தொடரும்)

---

# கருமை

## (676-ம் பக்கத் தொடர்ச்சி)

## [திருக் கபசம் எழுதியது]

இருளாகிய கருமையினை லிந்நாட்டுக் கொள்கைகளை யொட்டிய செய்திகளிற் பல வமைதி பெற்றனவென்று கோடற்குச் சார்பாய் நிற்குஞ் சில நிகழ்ச்சிகளைக் கூறினோம். நீண்டவிருள் குடிகொள்ளக்கூடிய ஒரு நாட்டிற் பெற்ற நுகர்ச்சியால் தமிழ் மக்கள் இருளை யஞ்சினரென்பதற்குச் சான்றில்லை. ஏனெனின், நாமறிந்த வளவில், தமிழ் மக்கள் வேறொரு நாட்டிலிருந் தீண்டு வந்து குடியேறினர்களென்று சொல்லுதற்கியலாது. இது கருதியே அறிஞர் மாணிக்க நாய்க்கர் கூறுங் கொள்கையைச் சென்ற பகுதியிற் குறிப்பிட்டேர்ந்தது. வையகத்தின்

வட விறுதியி (North Pole) லிருந்து ஆரியர் வந்தனர் என்ற கொள்கை, இருளின் நீட்சியை அவர்கள் நுகர்ந்தனர் என்பதாற் பிறப்பதன்று. ஆரிய வேதங்களிற் கூறப்படுஞ் சில கோள் நிலைகள் வடவிறுதியி லன்றி வேறிடங்களில் நிகழக் கூடியனவல்ல என்ற வழக்கின் வலிகொண்டே அக்கொள்கை பெரும்பாலும் நிலவுகின்றது. ஊனுணவு பழைய ஆரியர்களாற் பெரிதும் விழையப்பட்டமையு மிக்கொள்கைக்கு அரணுகின்றது. குளிர் மிக மிக, ஊனுணவ பெருகுகின்ற தென்பதைப் பற்பல வெப்ப தட்ப நிலைகளுள்ள நாடுகளில் வாழ்கின்ற மக்களின் வழக்கங்களை யொப்பிட்டறிந்து கொள்க. நிற்க,

ஞாயிற்றின் தென்றிசைச் செலவிற் புறவிருள் மிகுந்து, உயிர்கள் உறக்கத்திலாழ்வதைக் கண்ட முதன் மக்கள், கூற்றுவனுலகு தென்பா லிருப்பதாகக் கொண்டது விந்தை கொல்? 'தென் புலத்தார்' என்று திருக்குறளிற் குறிப்பிடப் படுவோர் யாரென்று விளங்கவில்லை. இவர்களை, 'படைப்புக் காலத்து அயனுற் படைக்கப பட்டதோர் கடவுட் சாதி' என்றுர் பரிமேலழகர். அவர்க்குத் தென்றிசை இடமாயது யாதுபற்றி என்பதறிய மிக விழைகின்றேம். இது செல்க, கதிர்ச் செல்வனின் வடதிசைச் செலவில் ஒளி வளர்வதறிந்த தொன் மக்கள் கைலாயம் வட பாலிருப்பதாகக் கருதியதும் விந்தை கொல்? இது கொண்டு 'வடக்கிருத்தல்' எனும் பழைய தமிழ் வழக்கத்தின் பொருளறியப்படும். மருந்திற் கென்று செடி கொடிகளின் வேரை எடுப்பவர், வடக்கே செல்லும் வேரைச் சிறப்பாகக் கருதுவது ஈண்டு நோக்கற்பாலது.

நிலவுருண்டையின் படத்தை நோக்கின், அது வடபால் மேலாகவும், தென்பால் கீழாகவும் வைத்தெழுதப் பட்டிருக்கின்ற தென்பது உடனே தெரியும். எந்நாட்டின் படமும் இம்முறையிலேயே வரையப்படுகிறது. உலகெங்கும் இம்முறை பின் பற்றப்படுகின்றது. தென்றிசையை மேல் வைத்து நிலவுருண்டையைக் கருதுவதும் எழுதுவதுங் கூடுமாயினும், அவ்வாறு ஒருவருஞ் செய்கின்றிலர். அஃது இயற்



கைக்கு முரண்படும் போலும். காந்த ஊசியால் வடதிசையுந் தென்றிசையு மொருங்கே காட்டப்படுமாயினும், வடக்கையே காண்பிக்கப் பெரும்பாலு மது வழங்கப்படுகிறது. மாலுமிகள் வடதிசையைக் கொண்டே நெடுங்கடலிற் றமது நெறியை யமைக்கின்றனர். திசை காட்டுங் கருவி கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னும் வடதிசையே இரவில் வழிகாட்டியாக விருந்தது. ஏனெனின், எண்ணரிய விசும்பில் வடபாலுள்ள உடுக்களின் நிலை மற்றவற்றின் நிலைபோல் அவ்வளவு மாறுவதில்லை. வடதிசையின் சிறப்பு இன்று மொருவாறு விளங்குகின்றது. முன்னேருள் தூய்மை பெற்றுயர்ந்தோ ரெனக் கருதப்பட்டோரின் பெயர்களை, விசும்பில் வடக்கிருக்கும் விண் மீன்களுக்கிட்டிருப்பது உற்றுநோக்கத்தக்கது. துருவ மீன் (Pole Star), அருந்ததி (வடமீன்) ஆகியவற்றையு மிவற்றிற் கடுத்திருக்கும் உடுக்களையுங் கொண்டிஃதறியப்படும். இவற்றை யடுத்து ஏழு மீன்கள் ஒரு கூட்டமாக விருக்கின்றன. இக் கூட்டத்தை 'பெருங்கரடி' (Ursa Major) என்று மேனுட்டார் அழைக்கின்றனர். இந்நாட்டிலோ அதற்கு 'ஏழு முனிவர்' (சப்த ரிஷி) என்று பெயர். தமிழ் நாட்டின் எல்லை கூற வந்தோர் பெரும்பாலும் வடவெல்லையை முதற்கண் கூறினர். இதற்கு நச்சினார்க்கினியர் கூறுங் காரணத்தைத் தொல்காப்பியப்பாயிர வுரையிற் காண்க.

ஞாயிற்றின் வடதிசைச் செலவினுலுந் தென்றிசைச் செலவினுலும் வையகத்தில் தோன்றிய வழக்கங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டினேம். தென்றிசைச் செலவிற் புறவிருள் மிகுவதைக் கண்டஞ்சிய மக்கள், வையகமிருள் வாய்ப்பட்டொழியாதிருக்கும் பொருட்டுச் சில சடங்குகள் நிகழ்த்தி யிருக்கலாம். பகலோனைத் திங்கள் மறைக்குங்கால் (Solar Eclipse) வெளியிலுள்ள ஆடு மாடுகள் புல் மேய்வதை நிறுத்தி விடுகின்றனவென்று சொல்கின்றனர். ஆந்தை முதலிய இருட் பறவைகள் வெளிப்பட்டு அலறுகின்றன வென்றுங் கூறுகின்றனர். இந் நிகழ்ச்சிகள் ஞாயிறு முற்ற மறையும்பொழுது நடைபெறுகின்றன. இது மேனுட்டார் கண்டது. இது கொண்டு ஞாயிறு

வட விறுதியி (North Pole) லிருந்து ஆரியர் வந்தனர் என்ற கொள்கை, இருளின் நீட்சியை அவர்கள் நுகர்ந்தனர் என்பதாற் பிறப்பதன்று. ஆரிய வேதங்களிற் கூறப்படுஞ் சில கோள் நிலைகள் வடவிறுதியி லன்றி வேறிடங்களில் நிகழக் கூடியனவல்ல என்ற வழக்கின் வலிகொண்டே அக்கொள்கை பெரும்பாலும் நிலவுகின்றது. ஊனுணவு பழைய ஆரியர்களாற் பெரிதும் விழையப்பட்டமையு மிக்கொள்கைக்கு அரணாகின்றது. குளிர் மிக மிக, ஊனுணவு பெருகுகின்ற தென்பதைப் பற்பல வெப்ப தட்ப நிலைகளுள்ள நாடுகளில் வாழ்கின்ற மக்களின் வழக்கங்களை யொப்பிட்டறிந்து கொள்க. நிற்க,

ஞாயிற்றின் தென்றிசைச் செலவிற் புறவிருள் மிகுந்து, உயிர்கள் உறக்கத்திலாழ்வதைக் கண்ட முதன் மக்கள், கூற்றுவனுலகு தென்பா லிருப்பதாகக் கொண்டது விந்தை கொல்? 'தென் புலத்தார்' என்று திருக்குறளிற் குறிப்பிடப் படுவோர் யாரென்று விளங்கவில்லை. இவர்களை, 'படைப்புக் காலத்து அயனாற் படைக்கப பட்டதோர் கடவுட் சாதி' என்றார் பரிமேலழகர். அவர்க்குத் தென்றிசை இடமாயது யாதுபற்றி என்பதறிய மிக விழைகின்றோம். இது செல்க, கதிர்ச் செல்வனின் வடதிசைச் செலவில் ஒளி வளர்வதறிந்த தொன் மக்கள் கைலாயம் வட பாலிருப்பதாகக் கருதியதும் விந்தை கொல்? இது கொண்டு 'வடக்கிருத்தல்' எனும் பழைய தமிழ் வழக்கத்தின் பொருளறியப்படும். மருந்திற் கென்று செடி கொடிகளின் வேரை எடுப்பவர், வடக்கே செல்லும் வேரைச் சிறப்பாகக் கருதுவது ஈண்டு நோக்கற்பாலது.

நிலவுருண்டையின் படத்தை நோக்கின், அது வடபால் மேலாகவும், தென்பால் கீழாகவும் வைத்தெழுதப் பட்டிருக்கின்ற தென்பது உடனே தெரியும். எந்நாட்டின் படமும் இம்முறையிலேயே வரையப்படுகிறது. உலகெங்கும் இம் முறை பின் பற்றப்படுகின்றது. தென்றிசையை மேல் வைத்து நிலவுருண்டையைக் கருதுவதும் எழுதுவதுங் கூடுமாயினும், அவ்வாறு ஒருவருஞ் செய்கின்றிலர். அஃது இயற்



கைக்கு முரண்படும் போலும். காந்தவூசியால் வடதிசையுந் தென்றிசையு மொருங்கே காட்டப்படுமாயினும், வடக்கையே காண்பிக்கப் பெரும்பாலு மது வழங்கப்படுகிறது. மாலுமிகள் வடதிசையைக் கொண்டே நெடுங்கடலிற் றமது நெறியை யமைக்கின்றனர். திசை காட்டுங் கருவி கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னும் வடதிசையே இரவில் வழிகாட்டியாக விருந்தது. ஏனெனின், எண்ணரிய விசும்பில் வடபாலுள்ள உடுக்களின் நிலை மற்றவற்றின் நிலைபோல் அவ்வளவு மாறுவதில்லை. வடதிசையின் சிறப்பு இன்று மொருவாறு விளங்குகின்றது. முன்னோருள் தூய்மை பெற்றுயர்ந்தோ ரெனக் கருதப்பட்டோரின் பெயர்களை, விசும்பில் வடக்கிருக்கும் விண் மீன்களுக்கிட்டிருப்பது உற்றுநோக்கத்தக்கது. துருவ மீன் (Pole Star), அருந்ததி (வடமீன்) ஆகியவற்றையு மிவற்றிற் கடுத்திருக்கும் உடுக்களையுங் கொண்டிஃதறியப்படும். இவற்றை யடுத்து ஏழு மீன்கள் ஒரு கூட்டமாக விருக்கின்றன. இக் கூட்டத்தை 'பெருங்கரடி' (Ursa Major) என்று மேனாட்டார் அழைக்கின்றனர். இந்நாட்டிலோ அதற்கு 'ஏழு முனிவர்' (சப்த ரிஷி) என்று பெயர். தமிழ் நாட்டின் எல்லை கூற வந்தோர் பெரும்பாலும் வடவெல்லையை முதற்கண் கூறினர். இதற்கு நச்சினார்க்கினியர் கூறுங் காரணத்தைத் தொல்காப்பியப்பாயிர வுரையிற் காண்க.

ஞாயிற்றின் வடதிசைச் செலவினாலுந் தென்றிசைச் செலவினாலும் வையகத்தில் தோன்றிய வழக்கங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டினோம். தென்றிசைச் செலவிற் புறவிருள் மிகுவதைக் கண்டஞ்சிய மக்கள், வையகமிருள் வாய்ப்பட்டொழியாதிருக்கும் பொருட்டுச் சில சடங்குகள் நிகழ்த்தி யிருக்கலாம். பகலோனைத் திங்கள் மறைக்குங்கால் (Solar Eclipse) வெளியிலுள்ள ஆடு மாடுகள் புல் மேய்வதை நிறுத்தி விடுகின்றனவென்று சொல்கின்றனர். ஆந்தை முதலிய இருட் பறவைகள் வெளிப்பட்டு அலறுகின்றன வென்றுங் கூறுகின்றனர். இந் நிகழ்ச்சிகள் ஞாயிறு முற்ற மறையும்பொழுது நடைபெறுகின்றன. இது மேனாட்டார் கண்டது. இது கொண்டு ஞாயிறு

தெற்கே செல்வதைக் [illegible] தொல்லுலக மாந்தரின் நினைவுகளை நாமொருவாறு அறியலாம். ஆனால் பன்னூறாண்டுகள் சென்ற பின் வேறு வகையான எண்ணங்கள் மக்களுக்குத் தோன்றியிருக்கும். அகவிருளி லழுந்தி உயிரழிந்திடாது காக்கப்பட வேண்டுமென்ற நினைவு நாளா வட்டத்திற் பிறந்து முற்கண்ட சடங்குகளுடன் ஒன்றிற்றென்று கொள்க.

புறவிருளை வடதிசைச் செலவில் நனிகடியுமொரு ஞாயிறு போல் அகவிருளை யகற்றுமொரு பொருளுண்டாயின், அது வடக்கே ஒளி வடிவினதா யிருக்குமெனக் கோடல் இயற்கையே. ஒளிக்கு ஒளியாகிய வப்பொருளை நெருங்க நெருங்க ஞாயிறு சுடர் மிகுந் திலங்குகின்றது; அதை விட்டுத் தெற்கே விலக விலக ஞாயிற்றி னியல்பு குறைகின்றது என்று தொன்மையோர் நினைத்திருக்கலாம். ஞாயிற்றை இயக்கி, அதனுயிர் வளர்ச்சியைப் பெருக்குமொரு தனிப் பொருள் ஒளி வடிவினதாயின், அஃது அழல் போலிருக்குமென்பது கருத லளவையாற் பெறப்படும். ஏனெனின், ஒளிக்கு முதலாவது நெருப்பு. ஞாயிறென்று நாம் சொல்லும் பெரிய ஒளியும் உன்னுதற் கரியவொரு அழற்பிழம்பன்றி வேறன்று. அழனிறக் கடவுளென வந்தவாறிதனாற் கண்டு கொள்க. உயிர்களுக்கின்றியமையாத ஒளியும் வெப்பமு முறைவதற் கிடமாய், அதுபற்றி இயக்கத்திற்கு முதலாய் நிற்கும் பொருளெனக் கொளப்படு மொன்று அழிக்கு மாற்றலாக மாத்திரம் பேசப்படுமாயின், அது கேட்டு நகுக. அழிவிற்கு இருளுங் கருமையுந் தலையாய காரணங்களாம். இதுகாறும் நாம் கண்டவற்றால் ஒளியின்றி உயிர் வளர்ச்சி இல்லை என்பது மிகத் தெளிவாக உறுதி செய்யப்பட்டது. உண்மை இவ்வாறிருப்ப, அழிக்கு மாற்றலாக மாத்திரம் ஒளியைக் கருதுவது எங்ஙனம் அறிவின் பால் வைத்தெண்ணப்படும்? ஆயினும் ஒளி விலகிடின் அழிவு நேருமென்ப துண்மையே.

ஞாயிற்றிற்குரிய தமிழ்ப் பெயர்களில் 'பகலவன்' என்பதொன்று. 'பகல்' என்ற சொல், 'பிரித்தல்' என்று பொருள்படும்: அது 'பகு' என்ற முன்னிலையிலிருந்து தோன்று



கின்றது. பகல் என்ற சொல்[illegible]டைக் குறைவு பட்டு, 'பால்' என்று நின்று, 'பிரிவு, வகுப்பு' என்று பொருள் தருகின்றது. ஆதலின், 'பகலவன்' என்பதற்குப் 'பிரித்தலைச் செய்கிறவன்' என்பது பொருளென் றறிகின்றோம். சங்க நூல்களில் 'பகல்' என்ற கிளவி, 'முறைமை' என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இவ்விரு பொருள்களும் ஒன்றையொன்று தழுவியவே. எங்ஙனமெனின், பாம்பென்றுந் தாம்பென்றுங் கட்டையென்றுங் கல்லென்றும் பிரித்துணர்தல் ஒளியிலேயே கூடும். கட்டையுங் கல்லுந் தெரியாவிடத்து வகுத்தலுமில்லை, தொகுத்தலுமில்லை. அறிவின் வளர்ச்சி, வேறு படுகின்றவற்றை வகுத்தலினும், ஒன்றுபடுகின்றவற்றைத் தொகுத்தலினு முளது. இஃதறிய மாட்டாதவனை 'வகை தொகை தெரியாதவன்' என்று சொல்கின்றோம். வகை என்பது நெறி; நெறி என்பது முறை; முறை என்பது ஒழுங்கு. ஒளி யில்லாவிடின் ஒழுங்கு எங்கிருந்து வரும்? இது புறவுலகை யொட்டியது. அகவுலகில் நன்மை, தீமை என்பவற்றைப் பிரித்துக் காட்டு மாற்றலைப் பகுத்தறிவு என்று கூறுகின்றோம். (பகுத்தல்—பிரித்தல்). தீமையை யகற்றி நன்மை செய்வதே முறைமையாவது. இது நடை பெறுவதற்கு அகவொளி வேண்டும். இவ்வக வொளியின் முதலையே அழனிறக் கடவுளென்றனர். (தொடரும்)

---

# பண்டைத் தமிழ்ச் சொற்கள்

(திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.)

## அழகன் (௧௧)

கடவுளைக் குறிக்கும் பண்டைத்தமிழ்ச் சொற்களில் அழகன் என்னும் சொல் ஒன்று. அச் சொல்லைப்பற்றி இக் கட்டுரையில் ஆராய்வாம்.

2. அழகன் என்னும் சொல் அழகு என்னும் பெயர்ச் சொல்லுடன் அன் என்ற ஆண்பாற் படர்க்கை விகுதி சேர்ந்து

le) வி
உயிரின்முன் வந்த உகர ட்டு ஆகியது. அழகன் என்ற சொல் அழகை உடையவன் என்று பொருள்படும். அழகு என்பது என்ன? கடவுளை அழகை உடையவன் என்று தமிழ் முன்னோர்கள் சொல்ல என்ன காரணம்?

3. அழகு பலவகை உருவத்தில் (form) உள்ளது. அவ்வுருவமும் பருமை நுண்மைகளால் (density and subtility) பலவாறாக உள்ளது. உருவத்தில் விளங்குகிற உயிரினுடைய வேட்கை அறிவு செயல்களில் அழகு உள்ளது. நுண்கலைகள் (Fine Art) எல்லாம் அழகை அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றன. ஓவியப் புலவனொருவன் ஓர் ஓவியப் படத்தை அதனைப் பார்ப்பவர்கள் கண்ணைக் கவரும்படி அழகுபெற வரைகின்றான்; சிற்பனொருவன் ஒரு சலவைக் கல்லில் ஒருயிரின் உருவத்தை அதனுடைய உயிர்த்தன்மை முகத்தில் விளங்கும்படி அழகுபெற அமைக்கின்றான். செந்நாப்புலவன் (Poet) ஒருவன் ஒரு கருத்தை அதனைக் கற்பவர்களுடைய உள்ளம் கவரும்படி சொற்களால் அழகுபெற அமைக்கின்றான். இசைப் புலவனொருவன் தான் பாடுகிற பாட்டில் அல்லது கீர்த்தனையில் தாளம் முதலியவை ஒன்றுபட இயைந்து கேட்பவர் காதுக்கு இனிமை பயக்கும்படி அழகுபெறப் பாடுகின்றான். ஓவியப் புலவன் ஒரு சுவர், துணி, அல்லது தாளில் கண்கவர் ஓவிய உரு எழுதுதற்கும், சிற்பன் சலவைக் கல்லில் நல் உருவம் செதுக்குதற்கும், செந்நாப்புலவன் தான் எழுதும் செய்யுளில் சொற்களால் உயரிய கருத்துக்களை அமைத்தற்கும், இசைப் புலவன் தான் பாடும் பாட்டில் பண்ணமைத்துப் பாடுதற்கும் இன்றியமையாது வேண்டப்படுவது, அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் உள்ளக்கிழியில் உருவெழுதுதலாகும். அவர்கள் தங்கள் உள்ளக்கிழியில் உருவங்கள் எழுதுதற்கு முன் ஓவியம் எழுதலும், சிலை உரு அமைத்தலும் செய்யுள் செய்தலும் இனிய பண் பாடுதலும் முடியாவாம். அவர்கள் நால்வரும் அவர்கள் போன்ற ஏனைய நுண்கலைஞர்களும் வேறுவேறு நுண்டொழில் செய்தற்கு அவர்களுக்கெல்லாம் பொதுவாய் விளங்குகின்றது உள்ளக்கிழியின் உரு அமைத்தலாகும். அவர்கள் தங்கள் தங்



கள் உள்ளக்கிழியின் உரு அமைக்கிருக்குவெளியிலே கண் காட்சிக்குக் காணப்படுகிற உருவங்களுக்கும் அப்பாற்பட்ட உயரிய கருத்துப் பொருள்களை விளக்குகிறார்கள். ஓவியப் புலவனும் சிற்பனும் தாங்கள் அமைக்கும் உருவில் அவ்வுருவுக்கு உரிய முகச்சாயலைக் காட்டுகிறார்கள். அருளாளர்களாயுள்ள செந்நாப்புலவரும் இசைப்புலவரும் தமது செய்யுளைக் கற்கிறவர்களுக்கும் பண்ணைக் கேட்கிறவர்களுக்கும் உருவ நிலையையும் உயிர் நிலையையும் கடந்து நின்ற கடவுள் நிலை இன்பத்தை எட்டச் செய்கிறார்கள். உள்ளக்கிழியின் உரு அமைப்பு இவ்வாறு செய்யுமானால் அவ்வுள்ளக்கிழியில் விளங்குவது கடவுளது அருள் விளக்கமாகவே யிருத்தல் வேண்டும். கடவுளது அருள் விளக்கம் உள்ளத்திலில்லாதவர்கள் அதனைப் பிறர்க்கு விளங்கும்படி செய்யமுடியாது. ஆகவே ஓவியப் புலவன் தான் எழுதும் ஓவியத்தில் அழகு அமைத்தற்கும், சிற்பன் தான் செதுக்கும் சலவைக் கல்லில் அழகு விளங்க உருவம் அமைத்தற்கும் செந்நாப்புலவன் தான் செய்யும் செய்யுளில் அழகு விளங்கும்படி பாடுதற்கும் இசைப்புலவன் தான்பாடும் பாட்டில் அழகான பண் அமைத்தற்கும் அடிமுதலாயுள்ளது அவர்கள் உள்ளத்தில் விளங்கும் அருள் விளக்கமேயாகும். ஆதலின் அருள் விளக்கமே அழகாகின்றது. (Beauty is the expression of God's energy.)

4. மேற்கூறிய நான்குவகை நுண்கலைஞர்களும் செயற்கைப் பொருள்களிலேயே அழகு விளங்கும்படி செய்கிறார்கள். கடலிலும் மலையிலும் காட்டிலும் சோலையிலும் மரங்களிலும் செடிகளிலும் பூக்களிலும் இன்னம் எங்கும் காணப்படுகிற இயற்கைப் பொருள்களிலும் நாம் அந்தச் செயற்கை அழகைவிட எவ்வளவோ மேலான அழகைக் காணலாம். இயற்கைப் பொருள்களிலே தோன்றுகிற கட்புலன் கதுவாப் பேரழகு கடவுளுடைய அருள் விளக்கமேயாகும். திருஞான சம்பந்த சுவாமிகள் தாம் பாடிய பல தேவாரப் பாட்டுகளில் முன் இரண்டு அடிகளில் கடவுளினது அருட் பெருமையைச் சிறப்பித்துக் கூறிப் பின் இரண்டு அடிகளில் அவ்வருள் விளங்கு

கின்ற இயற்கை அழ[illegible]றப்பித்துக் கூறுகிறார். திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவ்வாறு சில தேவாரப் பாக்களில் இயற்கை அழகைக் கூறுகின்றார். மூன்று நாயன்மார்களும் கடவுளை அழகன் என்று பல இடங்களில் கூறியிருக்கின்றார்கள். ஒவ்வொரு நாயன்மாருக்கும் ஒவ்வொரு அடி குறிக்கிறேன். திருஞான சம்பந்த சுவாமிகள் "அன்று முப்புரஞ் செற்ற அழக" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் "அழகனே யாலவாயிலப்பனே அருள் செய்வாயே" என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் "அழகாவுனக்காளாயினி யல்லே னெனலாமே" என்றும் பாடி அருளினார்.

5. அருள் விளங்குகிற உள்ளமுடைய அறிஞர்கள் தங்கள் உள்ளத்தால் அழகாக நினைத்தும், தங்கள் நாவால் அழகாக இன்னுரை பாடியும், தங்கள் உடலால் அழகாக இனிய செயல்கள் செய்தும் உலக வாழ்வில் ஒழுகுகின்றார்கள். அவர்கள் உலகில் அருள் விளங்க நினைத்தலே அழகாக நினைத்தலாகும்; அருள் விளங்க உரைத்தலே அழகாக உரைத்தலாகும்; அருள் விளங்க உடற்றொழில் செய்தலே அழகாகச் செய்தலாகும். இவ்வாறு உள்ளத்தால் நினைத்தும் நாவால் உரைத்தும் உடலாற் செய்தும் ஒழுகும் வாழ்க்கையே எல்லா உயிர்களும் நலம் பெற வாழும் ஒற்றுமை வாழ்க்கையாகும் (Hormonious life). திருநாவுக்கரசு சுவாமிகள் நினைந்த திருநேரிசைத் தேவாரப் பதிகத்தில் "அழகனை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே' என்னும் மெய்யுணர்வு பெற்ற ஔவைப்பிராட்டியார் "செய்வன திருந்தச் செய்" என்றும், அழகலாதன செய்யேல்" என்றும் கூறியிருத்தல் காண்க.

6. பருமையான ஒருடலினுள்ள உறுப்புக்களெல்லாம் ஒன்றுக்கொன்று இயைபுடையவைகளாகி ஒருமையுற்று இணங்கி உடலுக்கு அழகாயிருத்தல் போல அவ்வுடலில் இயங்கும் உயிராயுள்ள ஒருவன் தன்னுடைய உள்ளம் நினைவும் நா உரையும் உடற்செயலும் ஒன்றுக்கொன்று இணங்கி யிருத்தலன்றிப் பிறர் தங்கள் உயிர்நலங் கருதிச் செய்யும் அத்தகைய நினைவு



உரை செயல்களுக்கும் இணங்கியிருக்குந் தன்மையே அழகாகும். பல இசைக்கருவிகளின் வேறு வேறு ஒலிகளும் ஒற்றித்து இசைபாடுவோனுடைய மிடற்றொலிக்கு இயைந்து நின்று கேட்போர் காதுக்கு இனிமை அளித்து அழகாயிருத்தல் போல மக்கள் பல்லோருடைய வேறு வேறு உள்ளம் நா உடற்செயல்களும் இயைந்து சேர்ந்து இன்பநலம் அளிக்குந்தன்மை அழகாகும். அழகுக்கு அடிப்படையாயுள்ள உண்மை நேர்மை ஆகும். (Harmouy is the underlying principle of beauty) நேர்மையின்றி அருளுண்டாகாது. அந்நேர்மையே அருளின் தன்மையாகும்.

7. கிரேக்கர்கள் கிறிஸ்து பிறந்த காலத்துக்கு முன்னரே நுண்கலைகளைத் துறைபோகக் கற்று அவைகளிலே திறன் அடைந்திருந்தார்கள். அவர்கள் அழகான வாழ்வையே (Beauty of life) தங்கள் சமயத்துக்குக் குறியாகக் கொண்டிருந்தார்கள். கிரேக்கர்கள் நாகரீக காலத்துக்கு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர்கள் நுண்கலைகளில் தேர்வு பெற்றிருந்தார்கள். இப்பொழுது காணப்படுகிற திருக்கோயில்களின் அமைப்புகளும் அங்கே உள்ள உருவங்களின் அமைப்புகளும் இந்திய நாட்டில் அஜந்தா (aganda) முதலிய இடங்களிலுள்ள பேர்போன ஓவியப்படங்களும் சிலை உருவங்களும் அவர்களுடைய நுண் கலைத்திறனைக் காட்டுகின்றன. பண்டைக் காலத்தில் நுண்கலைத் தேர்வு அடைந்திருந்த தமிழர்கள் தாங்கள் வழிபட்ட கடவுளுக்கு அழகன் என்ற பேர் வழங்கினது இயல்பே. அவர்கள் தாங்கள் வழிபட்டு வந்த அறுமுகக் கடவுளை அழகன் என்று பொருள்படுகிற முருகன் குழகன் என்ற பேர்களைச் சொல்லி அழைத்தார்கள்.

மேலே கூறியவாற்றால் கடவுள் அருளுடையவனாயிருத்தலின் அழகன் என்ற பெயராற் பண்டைத் தமிழ் மக்களாற் குறிக்கப்பட்டுள்ளான் என்பது தெளிவாய் விளங்கும்.

**அழகே பரனருள் விளக்க மாகும்**
**எதனு லென்னி லியம்பக் கேண்மின்**

லேன். அந்த எண்ணம் எனக்குச் சிறிதும் கனவிலும் கிடையாது. அதுவே ஒவ்வொரு உண்மைச் சைவனுடைய எண்ணமுமாம். ஆனால் கொள்கைகளின் விவரணத்திற்காக அங்கங்கே பொருள்களை எடுத்துக்கூறுதல் அவசியமாகும். அதுபற்றி எவரும் என்பேரில் கோபிக்காமல் இருக்கும்படி எல்லாரையும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

உடனே ஒருவர் எழுந்து என்னைக்கேட்பார். ஐயா! நில்லும்; என்னவோ புராணம் படிக்கப்போகிறீர்? ஊரெல்லாம் பஞ்சமும் தஞ்சமுமாய்த் தவிக்கிறது. கூழுக்கும் கூறைக்கும் தவிப்பார் பலர். பட்டினி கிடந்து சாவார் பலர். சிறையிற் புகுந்து சிதைகின்றார் பலர். இப்படியிருக்க நீவிர் எதைதையோ பேசப்போகின்றீர்களே. உரோமாபுரி தீப்பற்றி எரியும்போது நீரோ என்பவன் வீணை வாசித்தானாம். அவனுக்குத் துணையும் நீரோ. தன்னைப்பெற்ற தாய் தஞ்சையில் கிண்ணிப்பிச்சை எடுக்கிறாள், குமாரன் கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான் என்பது போலும் உமது கதை......என்று என்னைப்பேசுவார். அவருக்கு விடையளித்தல்லது நான் மேற்செல்ல முடியாது. நானும் அவரைக் கேட்பேன்? ஏன்! என்னைக் கேள்விகேட்க அவருக்கு உரிமையுண்டானால் அவ்வுரிமை எனக்கும் உண்டு. இது "சமஉரிமை" க்காலமல்லவா? ஐயா! நீர் கூழும் கூறையும் இன்றி உலகம் தவிக்கிறது என்றீரே. ஆம் உண்மைதான். அதற்குத் தான் எத்தனை ஆயிரம் பதினாயிரம் பெரும் பெரும் மக்கள் இங்கும் அங்குமாக எத்தனை கூட்டம்போட்டு எத்தனை பெரும்பேச்சும் பெரும் செயலும் செய்கிறார்கள். கான்பரென்சும் எலெக்ஷனும் மகாநாடும் என்னென்னவோ நடக்கிறதே நான் ஒரு சிறியன். ஒரு சிறு இடத்தில் ஒரு சிறு கூட்டத்தில் அந்தக் கூழும் கூறையும் தவிர வேறு பேசக்கூடாதா?

"எல்லாம் யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்று தாயுமானார் இவற்றையெல்லாம் பிரித்து முடிவு கட்டிவிட்டாரல்லவா. நல்லது இருக்கட்டும். கூழும் கூறையும் வீடும் மாடும் உலகமும் பெறுவதெல்லாம்



எதற்கு? அமெரிக்கர் ஒருவர் தனக்குள்ள பணத்தை அளவிட முடியாதவராம். தான் படுக்கும் படுக்கையில் பஞ்சுக்குப்பதிலாகப் பவுன்களையே பரப்பிப்படுத்துக் கொள்ளக்கூடுமாம். வேறொருவர் நமது நாட்டு இருப்புப்பாதைகளுக்குப் பதிலாய்த் தங்கப்பாதையே போடலாமாம். இவ்வாறு நாமும் ஆய்விடு கின்றோம் என்று வைத்துக்கொள்வோம்! அப்புறம்! இவையெல்லாம் பெறுவது எதற்கு? உடம்பு வாழ்வதற்கு. உடம்பு எதற்கு வாழ்கின்றது என்றால் உயிரின் பொருட்டல்லாமல் வேறு ஒன்றிற்குமில்லையே. ஆகவே கூழுக்கும் கூறைக்கும் கோடிப்பேர் கூப்பிட்டால் அவற்றைப் பெற்றபின் உண்டாகும் பயனுக்காக யாரொருவனும் என்னோடு நீவிர் சிலரும் கூப்பிடுவது மிகையாய் ஒழியுமோ. அவ்வாறாகாமல் மிகவும் இன்றியமையாதாய் முடியும். சோறுக்கும் கூறைக்கும் நாளில் 23½ மணிக்கூறும் ஆண்டில் 363 நாட்களும் கழிக்கும் நாம் அவற்றின் பயனுக்காக நாளில் அரை மணியும் ஆண்டில் இரண்டு நாளும் கழித்தல் மிகை என்று யார்தான் சொல்லக்கூடும்.

4. இனி நான் மேற்கொண்ட பொருள்களைப்பற்றிச் சில சொல்லத் தொடங்குவேன்.

சைவம். இதற்குச் சிவசம்பந்தமானது அல்லது சிவனையே கடவுளாகக் கொண்டொழுகும் கொள்கைகளின் கூட்டம் என்று பெரும்பான்மையாய்ப் பொருள் கொள்வர். ஆனால் உலகியல் வழக்கிலே வைத்துப்பார்த்தால்சிலபெரும்பொருள்கள் கிடைக்கின்றன. ராமராவ் நடத்தும் "மறுட்டிய மிலிட்டேரி ஓட்டலிலாவது, நாராயணநாயக்கருடைய தஞ்சாவூர் மிலிடேரி ஓட்டலிலாவது வெளிப்பலகையின் கீழ் ஒவ்வோர் நாள் "இன்றைக்குச் சைவ சாப்பாடு" என்று எழுதிய பலகை தொங்குமானால் அங்கே நின்ற "சைவ" என்னும் அடைமொழி எத்தனை பொருள் தந்து நிற்கிறது காண்க. நாங்களும் இன்றைக்குச் சைவம்: என்றாவது அல்லது 'வெகுநாளாய்ச் சைவம்' என்றாவது பரம்பரையாய்ச் சைவம், என்றாவது ஒருவன் சொன்னால் சைவம் என்ற சொல் புலால் உண்ணாத ஒழுக்கம் என்பதையும்,

இன்னும் இந்தச் சைவ அடையாளங்களைப்பற்றிப் பேசினால் எனது நண்பர் திரு. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "குறிகளும் கோயிலும்" என்ற தமது பொருளைக் கொள்ளை கொண்டதாக என்மேற் கோபிப்பார். ஆதலின் இம்மட்டோடு நிறுத்திக் கொள்வேன்.

6. இனி இந்தச் சைவமானது எங்கே இருக்கின்றது என்று சில பேசுவோம். சைவமென்பது ஒரு சாதிப் பெயராக அநேகர் எண்ணி வழங்குகிறார்கள். உலக வழக்கில் அது சாதிப் பெயராய் வழங்கி வருதலும் உண்மையே. ஆனால் அதனைச் சமயக் கொள்கையின் பெயராகவே மேலே விவரணத்தில் எடுத்துக் கூறினோம். சாதிச் சைவம் வேறு. சமயச் சைவம் வேறு. சாதிச் சைவத்திலே சமயச் சைவம் ஏக தேசத்திலேதான் காணப்படும். சமயச் சைவத்திலே சைவச்சாதியொழுக்கமும் அப்படியேதான். இவ்வேற்றுமை யுணராதார் இதனால் பெருங்கலகம் விளைத்துக்கொள்வர். பெருங்கலாத்துக்கு நிலைக்களனாதலின் இதனைப் பற்றிச் சில உதாரணங்களால் விளக்குதல் அவசியமாகும். மனிதர் என்பவர் எல்லாரும் மனிதர் அல்லர். கை கால் முகம் முதலிய மனித உறுப்புக்கள் மட்டும் பெற்றிருப்பதாலே எல்லாரும் மனிதர் என்ற சொல்லுக்கு இலக்காகார். மனிதருள்ளே மனிதரல்லாதவரும் அனேகர். மனிதருக்குள்ளே பாம்புண்டு, புலியுண்டு, கரடியுண்டு என்ற ஒரு பாட்டுக்கூட ஒரு புலவர் பாடியுள்ளார். இவ்வகை பாம்பு மனிதர், புலி மனிதர், கரடி மனிதர்களை எவ்வாறு தெரிவது என்றால் "காமமென்கின்ற கதுவு வெந்தீயும் கடுஞ்சினமெனப்படு புலியும்" என்று சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கை ஒட்டிக் கண்டு கொள்ளலாம். ஆனால் உருவத்தாலும் உறுப்பாலும் புல்லுருவம் போல மனிதராய் நிற்பார் எல்லாரும் ஒன்று போலவே, கறுப்பன் ; சிவப்பன் ; வெளுப்பன் ; மஞ்சளன் ; நெட்டையன் ; குட்டையன் ; குணத்தன் சினத்தன் ; அறிஞன் ; மடையன் ; அருளன் ; மருளன் ; ஒழுகியான், வழுவியான் என்பனவாதி எவ்வித வேற்றுமையுமின்றி



எல்லாரும் ஒன்று என்று கூச்சலிடும் புதுக்கொள்கையன் கோபத்துக்கு நாம் ஆளாவோமல்லோம். மனிதர்க்குள்ளே புலி மனிதர் கரடி மனிதர் இருப்பது போலவே சைவர்க்குள்ளேயும் சைவரல்லாத சமணர், கிறித்தவர், புத்தர் முதலியோர் உளர். இவ்வாறு நான் சொல்வது புதிதாகத் தோற்றும். புலாலுண்ணாதவனைக் கொண்டுங் கொடுத்தும் உள்ள குடிப்பிறப்பினால் மட்டும் சைவனாய் நிற்பான் ஒரு சாதிச் சைவன். அவன் சமயச் சைவனாலே ஆசாரியராய் வழிபடப்பெறும் திருஞானசம்பந்தப் பெருமானைப்பற்றி இவர் சுமார்த்தப்பற்றுடையார். சைவசமயப் பற்றைவிட இவருக்குத் தமது சுயசாதிப்பற்றே மிக்கது என்றாவது அல்லது ஐயோ! சமணர்கள் பழந்தமிழர். கொல்லா நோன்புடையர், இவர்களைப்பற்றி நம்மை ஏமாற்றி இவர் சமணர்களைக் கொலை புரிவித்தார் கொலைக்குற்றமுடையார் என்றாவது சொல்வானானால் அந்தச் சாதிச் சைவனை நாம் சமயச் சைவன் என்போமா? இவன் சாதிச்சைவனாயினும் சமயச் சமணனாம் என்று பிரித்துணர்ந்தொழுக வேண்டுவதுதானே முறை. இதுபோலவே பிறவும் கண்டு கொள்ளலாம்.

7. சைவம் என்பது ஒரு சாதியையோ அல்லது ஒரு மொழியையோ பற்றியதல்ல என்பது உறுதி. சிலர் இதை சைவச்சாதியே பிடித்தது என்றும் தமிழ் என்னும் ஒரு மொழியையே பிடித்தது என்றும் இவ்வாறெல்லாம் எண்ணுதலில் சைவத்துக்கு வரும் இடர்ப்பாடுகள் பல.

சைவம் உலகமெல்லாம் பரந்தது. பரந்து ஓங்கியது. தமிழ் நாடும் தமிழரும் மட்டும் சைவத்திற்கு இலக்கானவர் என்பது தவறு. "உலகெங்கும் நிரம்பியசைவம் உயர்ந்துமன்ன" எனவும் "முதற் சைவம்" எனவும் "பொருட் சமய முதற் சைவ நெறி" எனவும் வரும் திருவாக்குகள் என் கொள்கையை நிறுத்துவனவாம். அப்பாலு மடிச்சார்ந்தார் புராணத்திலே ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள்

" மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக் கப்பாற்
முதல்வனு ரடிச்சார்ந்த முறைமையோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறு
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமே லடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியா னடிச்சார்ந் தார்கள்
செப்பிய வப்பாலுமடிச் சார்ந்தார் தாமே."

என்றருளினமையால் இனிது விளங்கும். இஃதிப்படியாகத் தெலுங்கச் சைவர், கன்னடச் சைவர், வடமொழிச் சைவர், ஆங்கிலச் சைவர் முதலியோரை நாம் எவ்வாறு ஒதுக்கிச் சைவத்தைக் கணக்கிடக்கூடும். மேலே காட்டிய கொள்கை வகையிலேயும் அடையாள வகையிலேயும் எங்கும் பரந்த சைவம் காலத்தையும் இடத்தையும் பிற கட்டுப்பாடுகளையும் கடந்து நிற்பது என்பது விளங்கும்.

வட மொழி தமிழ் என்ற கேள்வி இப்போது நமக்குள் புகுந்துகொண்டு நம்மை எவ்வளவு அளவுக்கு மீறி அலைக்கிறது. சிவ என்னும் மொழி வடமொழியிலே ஒளி என்னும் பொருள் கொண்ட சிவ என்பதன் எழுத்து நிலைமாறிய பகுதியிற் பிறந்த சொல்லோ, அன்றி (எல்லாவற்றினும்) நிற்பது. கிடப்பது என்னும் பொருள்கொண்ட சிவஎன்னும் பகுதிகொண்ட சொல்லோ அல்லது சிவப்பு என்ற தமிழ்ப் பகுதியிற் பிறந்ததோ என்பது பெருஞ்சண்டை. அரசாங்க உத்தியோகப் பற்றுக்களிலேயும் இந்நாள் உலக வியாபாரங்களிலும் உழலும் ஆசிரியர்களுக்கும் பிறர்க்கும் சண்டையும் இகலும் உளதாயின் அஃது அவர்கள் உயர்வாய்க் கொள்ளும் மொழியாகிய வடமொழியையும் அதிற் கண்ட நூல்களையும் பற்றியது. இவர்களைப்பற்றிய குரோதம் ஆடும் ஓநாயும் கொண்ட கதைபோல இவர்களின் முன்னோர்களையும் பிடித்து அவ்விரோதங் காரணமாக சச்சரவுகளுக்கு இடமுண்டாக்கி விட்டது நமது துர்ப்பாக்கியம். வடமொழி என்ற வாடைதானும் பலர்க்குத் துவேஷமாயிற்று. நேற்று வந்த ஆங்கிலத்தைக் கைக்கொண்டு பயன்பெற முயலும் இந்நாள்



மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாய்த் தமிழகத்திலே உடன் பயின்று நமக்குப் பல ஞானங்களை உதவிய வடமொழியை வெறுப்பானேன். அப்படி வெறுப்போமானால் அவ்வடமொழியையும் நூல்களையும் நூன் முடிவு முதலியவற்றையும் கைக்கொண்டு ஒழுகி நம்மையும் படைத்து நமக்கு அளவில்லாத தமிழ்ப்பண்டாரங்களைத் தேடிவைத்த நமது தமிழ் மூதறிஞர்களையுங்கூட அன்றோ வெறுத்து ஒதுக்குதல் வேண்டும். ஐயோ! தொல்காப்பியர், சைவசமயாசாரியர்கள், புராணிகர்கள், தாயுமானர், குமரகுருபரர், சிவஞான முனிவர் முதலிய ஒருவரும் தப்பி நமக்கு எஞ்சி நிற்க மாட்டார்களே! வடமொழியைப் பார்ப்பனருக்கு ஒதுக்கித்தருவானேன். காளிதாசரும் பிறரும் பார்ப்பன ஆரியரா ? தமிழ்ப் பெரியர்களிற் பார்ப்பனரை எவ்வாறு ஒதுக்குவது?

பம்பாய் மாகாணத்திலே உள்ள காம்பீலியில் வாழ்ந்த நேசநாயனர் நமது நாயன்மார்களிலொருவர். கௌதமசாக்கியமுனி கைக்கொண்ட சாக்கிய சமயத்தவரான சாக்கிய நாயனர் அச்சமயச் சார்பாகிய ஒழுக்கத்திலிருந்து வேறு படாமல் சிவ வழிபாடாற்றிய வகையிலே சாக்கியத்துக்குள்ளே சைவம் புகுந்துகொண்டது 'கொலையும் புலால் மறுத்தலுமே சைவத்திற்கு அடிப்படை என்ற நிலைதானும் கண்ணப்ப சுவாமிகள் சரித்திரத்திலே வேறு பிரித்து உணரவேண்டியிருக்கிறது.

இவற்றையெல்லாம் கண்டேனும் சாதிச்சைவம் வேறு சமயச்சைவம் வேறு என்று கண்டு அந்நிலையிலே நாம் ஒழுக முற்படுவோமானல் நமக்குள் வரும் பல சண்டைகள் ஒழியும்.

8. இனி சைவன் என்பவன் சைவ ஒழுக்கம் பூண்டு நடப்பவன் என்பது யாவரும் ஒப்புவர். இதனைச் சாதியோடு பொருத்தியதனல்வரும் சண்டைகள்யாவும் சிறிது ஊன்றிப் பார்க்க ஒழிந்துபோம். இவற்றின் விவரம் மேலே சைவத்தைப் பற்றிய பேச்சில் சொல்லியுள்ளேன். எப்படியாயினும் சாதிச் சைவனுக்குச் சமயச்சைவ ஒழுக்கம் இன்றியமையாததென்று யாவரும் மறுக்கமுடியாது.

"ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்கவேண்டா"

எனவும் சைவசமயம் பரமாசாரியார் அருளினார். இதற்கு சேக்கிழார் சுவாமிகள்,

"ஓதுமெல்லை உலப்பில வாதலின்
யாதுமாராய்ச்சி யில்லையா மென்றதாம்"

என்று உரையும் விதந் தோதினார்கள். தனது ஆசாரியனையும், அருள் நூலையும் ஆராய்பவன் தனது தாய் தந்தையரை ஆராய் பவனேயாவன். ஆராய்ச்சி வேண்டாமென்று நான் கூற வர வில்லை. நமது மேற்காட்டிய பிரமாண நூல்களும் கூடப் பொய் யும் பிறழ்வும் கூறும் என்ற உணர்ச்சி வருவதானால் அவ் வாராய்ச்சி நமக்கு வேண்டாம் என்பதே எனது கருத்து. கிறித்தவர்க்கு விவிலிய நூலும், மகமதியர்க்குக் குரானும், அரு கர்க்குப் பிடகமும் பிரமாண நூல்கள் ஆகும். அதுபோலச் சைவத்திற்கு இவை பிரமாணம் என்று நாம் வகுத்து உட் கொள்ளாவிடின் "மேய்ப்பாருமின்றி வெறித்துத்திரியும்" பட் டியேயாவோம். பிரமாண நூல்களின் தாரதம்மியமும் தமக்குத் தாமே பிரமாணமாக உள்ளவற்றையும் நாம் தெரிந்து முறைப் பட வகுத்துக்கொள்ளாவிடின் வீண்கலகத்துக்கும் பாவத் துக்குமே ஆளாவோம். நமது சமய நூல்களைச் சுட்டெரிக்க ஒருவன் கூறினால் அவனுக்கு அதன்படியே சுட்டெரிப்போம். பெரிய புராணமாதி சமயநூல்கள் பொய்க்கதைகள் என்றும் இவற்றின் செய்யுளில்விட ஒப்பாரிப்பாட்டிலே இன்பமுளது என்று ஒரு புலவன் சொல்வானானால் அவனுக்கும் அவன் எண் ணியபடி ஒப்பாரி பாடுவோம்.

சுமார்த்த பிராமணர் என்ற காரணத்தால் திருஞானசம்பந் தப் பெருவாழ்வும், அவர் சரிதத்திலே சமணர் கழுவேறிய தாகக்கூறும் பகுதியைச் சொல்லிய அளவிலே நம்பியாண்டார் நம்பிகளும் சேக்கிழாரும், வடமொழி தென்மொழி வகுத்து ஆகமங்கூறவந்த காரணத்தினாலே திருமூலரும் ஆராய்ச்சியிலே ஒதுக்கப் பெறுவார்களாயின் நாம் பின்பற்றி ஒழுக ஆசாரியர்



களும் நூல்களும் இல்லாமலே போய்விடும் என்று நான் உங் களுக்கு எச்சரிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

10. முடிபு: அன்பர்களே, என் முன்னுரை யான் எண்ணி யதைவிட நீண்டுவிட்டது.

சைவம் யாது? சைவர் யார்? சைவநூல் யாவை? அவற் றின் முடிபுகள் யாவை? என்பனபற்றி எனது எண்ணத்திற் பட்ட சிலமொழிகள் மேலே பேசினேன். சைவர்களாகிய நமது கடமை ஒன்றேயுளது. மேலே சொல்லியவாறு சைவநூல்களை யும் அவற்றிற்சொல்லும் பொருள்களையும் போற்றுதல் வேண் டும். சைவநூன் முடிபுகளாய்ச் சிவஞான போதத்தின் 12 சூத் திரங்களிலே போதிக்கப்பெற்ற பதியுண்மை, உயிர்களின் இருப்பு, பாசக்கட்டு இவற்றை அறிந்து பாச நீக்கத்திற்குரிய சாதனங்களாகிய குருமொழி, திருவைந்தெழுத்து ஆதியவை களை சாதனங்களாகிய குருமொழி, திருவைந்தெழுத்து ஆதிய வைகளை நல்லாசிரியர்பால் நன்குணர்ந்து, அந்த நல்வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகி, நாம் பாசத்தினின்றும் விடுதலைபெற்றுச் சிவத்தை அடைந்துய்வோம். இதற்கு இறைவனருளும், நல்லடி யார்கூட்டமும் துணைசெய்வதாக.

இந்த முடிபுகள் வேறு எந்தச்சமயம், எந்த நூல்களாலும் இதுகாறும் மறுக்கப்பெறவில்லை. இனி மறுக்கப்பெறப்போவது மில்லை. இவையே எல்லா நூல்களுக்கும் முடிந்த முடிபுகளாம்

அன்பர்களே, உங்கள் அன்புக்கு மிக நன்றியுடையேன்.

"என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்றுளா ரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவியுல கெலாம்"

# நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திரு. C. M. இராமசந்திரஞ் செட்டியாரவர்கள் B. A., B. L.]

## II அப்பர் சுவாமிகள்

அப்பர் சுவாமிகளுடைய சரித்திரம் பெரிய புராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும், சம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்திலும் அப்பூதியடிகள் புராணத்திலும் கூறப் பெற்றுள்ளது. மேலும் அவருடைய பெருமையைப்பற்றி நம்பி யாண்டார்நம்பி பதினோரும் திருமுறையில் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலையிலும் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணிமாலையிலும் புகழ்ந்திருக்கின்றனர். அப்பர் சுவாமிகள் திருஞானசம்பந்தர் காலத்தவர். ஆனால் வயதில் அவருக்கு வெகு ஆண்டுகளுக்கு மூத்தவர். இவ்விரு பெரியார் களும் அவதரித்த காலத்தில் தமிழ் நாட்டில் புத்த மதமும் சமண மதமும் பெருகி யிருந்தது. அம்மதங்களின் கொள்கைகள் அவைகளைத் தாபித்த மதாசாரியர்களின் உத்தம கொள்கைகளி னின்றும் பல விதங்களில் வேறுபட்டு கீழ்நிலை அடைந்திருந் தன. அக்காலத்தில் இப்பெரியார்கள் அவ்விதம் கீழ்மை யடைந்திருந்த கொள்கைகளைக் கொண்ட மதங்களை எதிர்த்து சுத்த சாத்வீக சைவத்தை நாட்டில் நிலைநாட்டினார்கள்.

அவர்களில் திருநாவுக்கரசு நாயனார் திருமுனைப்பாடி நாட்டிலே (இப்போது தென்னாற்காடு திருவாமூரில் (பண்ணு ருட்டி ஸ்டேஷனிலிருந்து 4 மைல்) சைவ வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற் பகுதியில் அவதரித்தார். அவர் தந்தையார் புகழனார்; தாயார் மாதினியார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருள் நீக்கியார். இவருக்குத் திலதவதியார் என்ற அருமைத் தமக் கையார் ஒருவர் இருந்தார். அவ்வம்மையாரை ஒரு சேனைத் தலைவர் கலிப்பகையார் என்ற சைவருக்கு மணம் செய்விக்க இருந்தபோது அவர் போருக்குச் சென்று சிவபதம் அடைந்த தினால் அவ்வம்மை விவாகம் செய்து கொள்ளாமலே இருந்து



தாய் தந்தையரும் உடன் பத்திலேயே சிவபதம் அடைய தம் தம்பியாரை ஆதரித்து வந்தார். மருள் நீக்கியாரும் தமக்கை யின் ஆதரவில் கல்வி கற்று அதன் பயனாகத் துறவறம் பூண்டார்.

பிறகு பல சமயங்களின் ஆராய்ச்சி செய்து வருங்கால் அக்காலம் பரவி இருந்த சமணமதக் கொள்கைகளை அறிந்து அதில் ஈடுபட்டு பாடலிபுத்திரம் என்ற திருப்பாதிரிப்புலியூரில் வசித்து வந்தார். அப்போது புத்தர்களிடம் வாதில் வென்று தருமசேனர் என்ற பட்டம் பெற்றார்.

புறசமயம் சென்றிருத்தலை அறிந்த தமக்கையார் அன்பு மிகுதியால் கடவுளைத் தியானித்துத் தம் தம்பியாரை மீட்கொ ள்ள விரும்பினார். அதன் பயனாகத் தருமசேனர்க்குச் சூலை நோய் வந்து அதனைச் சமணர்கள் தீர்க்காமல் போக அவர் தமக்கையா ரிடம் அபயம்புக்கு திருவதிகையில் பஞ்சாக்ஷரமும் திருநீறும் தரப்பெற்றுச் சைவராகிச் சூலை நோய் நீங்கத் தேவாரம் பாடி யருளினார். அப்பாசுரங்களின் நாவன்மையினால் நாவுக்கரசர் எனப் பெயர் பெற்றார். சைவத்தைத் தழுவியது முதல் இவர் இருந்தது திருவதிகை. அக்காலத்தில் திருவதிகை, பாடலிபுரம் என்பவை காஞ்சியில் ஆண்ட பல்லவர் ஆட்சி யில் இருந்தன. அப்போதைய பல்லவ அரசன் மகேந்திர வர்மன் என்ற ஜைன அரசன். அவன் சமண ஆசாரியர் களின் வேண்டுகோட் கிணங்கித் திருநாவுக்கரசரை நீற்றறையி லிருத்தியும், தலையைக் காலால் இடற யானையை ஏவியும், நஞ்சு கொடுத்தும், கல்லில் கட்டிக் கடலில் போட்டும் பலவாறு இம்சித்தான். ஆனால் தான் செய்தனவெல்லாம் பெரும் தவறு என்று அறிந்து இரங்கித் திருவதிகை சென்று திருநாவுக் கரசர் சரணங்களை அடைந்து சைவனானான். பாடலீபுத் திரத்து ஜைனப் பள்ளிகளை அழித்து திருவதிகையில் குண தரேச்சுரம் என்ற ஆலயம் கட்டினான். மேலும் இவன் வல்லம், தளவனூர், சீயமங்கபம், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி முத லிய இடங்களில் சிவன் கோயில்களையும் மகேந்திரவாடியில் ஒரு விஷ்ணு கோயிலும் கட்டினான் என்று கல்வெட்டுகளால்

வும் சென்று மறுபடியும் திருப்புகலூரில் சம்பந்தரைச் சந்தித்தனர். இங்கேதான் சிறுத்தொண்டர், நீலநக்கர் முதலிய அடிகளும் வந்து தரிசித்தனர்.

"பிள்ளையா ரெழுந்தருளப் பெருவியப்பால் வாகீசர்
உள்ளம்மகிழ்ந் தெதிர்கொண்டங் குடனுறைபு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பா லெழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமும் எழுந்தருளினார்"

இவ்வாறு திருப்புகலூரில் இருந்த காலம் சுமார் கி. பி.650-ஆக இருக்கலாம்.

பிறகு சம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையில் நீண்ட காலம் தங்கினார்கள். வேதாரணியத்திற்குச் சென்று அங்கே திருக்கதவு திறக்கச் செய்துவிட்டு, சம்பந்தர் மதுரைக்குச் செல்ல அப்பர் திருவீழிமிழலையில் இருந்தனர். மதுரையில் சம்பந்தர் சமணரை வென்றுகொண்டிருக்கையில் அப்பர் தொண்டைநாடு சென்று காளத்தியும் வடநாட்டு யாத்திரையும் மேற்கொண்டனர். வெகுதூர தேச யாத்திரை செய்து தளர்ந்த வயதில் வெகு சிரமப்பட்டு நீங்காத ஊக்கத்துடன் கைலையடைந்து இறைவனருளால் திருவையாற்றின் பொய்கையை அடைந்தார். பிறகு திருப்பூந்துருத்தி அடைந்து அங்குத் திருமடம் கட்டி அதில் தங்கினார். பிறகு சம்பந்தரை மறுபடியும் சந்தித்தார். இதனிடையில் பல ஆண்டுகள் சென்றிருக்கும். பிறகு தென்னாடு சென்று மீண்டும் திருப்புகலூர் வந்து அங்கே சிவசாயுச்சியம் அடைந்தார். அக்காலம் கி. பி. 655-ஆக இருக்கலாம். பெரிய புராணத்தில் இவருக்கு வயது குறிக்கப்படாமல்போயின போதிலும் முதிர்ந்த வயதினர் ஆக இருந்தார் என்று அறியக் கிடக்கிறது. சமயாசாரியர்களின் வயதை அறிவிக்கும் ஒரு வெண்பாவின்படி இவருக்கு 81 ஆண்டு உலகவாழ்வாகும். ஆகவே இவர் 574—655-க்கு இடையில் வாழ்ந்திருக்க வேண்டும்.

அப்பர் சுவாமிகளின் சரித்திரத்தில் கண்ட முக்கிய கூறுகளுக்கு எல்லாம் அவரது வாக்குகளிலிருந்தே ஆதாரங்கள் கிடைக்கின்றன. அவருக்கு ஏற்பட்ட சம்பவங்கள், அவர்



தல விசேடங்கள் அவர் சந்தித்த பெரியார்களின் பெயர்கள் அன்னார்களின் செயல்கள் இவைகள் எல்லாம் அவரது பாடல்களிலிருந்தே ஆராய்ந்து எடுக்கமுடியும். ஆனால் அவர் காலத்து அரசர்கள் பெயர்களைக் குறிக்கும் ஆதாரம் மாத்திரம் குறிக்கவில்லை. பெரிய புராணத்திலும் அரசர்களின் பெயர்களைக்குறிக்கவில்லை. அரசர்கள் லௌகீகப் பேர் வழிகள். ஆதலால் தங்கள் பார்வையில் வரத் தகுதி யுடையவர்கள் அல்லர் என்று விலக்கினர் போலும். எனவே சுவாமிகளின் காலத்தை நிர்ணயிப்பதற்காக இதர குறிப்புகளின் ஆதரவு தேட வேண்டியிருக்கின்றது.

சம்பந்தர் அப்பரின் பிற்காலத்தில் இருந்தவர். ஆதலினாலும் சம்பந்தர் காலம் வாதாபியை சிறுத்தொண்டர் பிடித்த காரணத்தைக் கொண்டு நிர்ணயிக்கப் பெற்றுள்ளதாலும் அப்பர் சுவாமிகளின் காலமும் தெளிவாக நிச்சயிக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பர் சுவாமிகளைப்பற்றி வேறு சில சரித்திர ஆதரவுகளும் உண்டு. அவைகளைக் கவனிப்போம்.

7-வது நூற்றாண்டில் பல்லவர்கள் மிகுந்த செல்வாக்குடன் காஞ்சியில் ஆண்டார்கள். அவர்களில் முன் சொன்ன மகேந்திரன் 600 முதல் 625 வரை ஆண்டான். அவனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம்ம வர்மன் பட்டத்திற்கு வந்து 660 க்குப் பிந்தியும் ஆண்டனன். அவன் ஆட்சியில் 640 வது ஆண்டில் யுவான் சுவாங் என்ற சீன தேச யாத்திரிகன் இந்திய நாட்டு யாத்திரை புரிந்து வருகையில் பல்லவர் தலைநகரான காஞ்சிக்கு வந்தான். அவன் பௌத்தன். சிலகாலம் காஞ்சியில் தங்கியும் இருந்தனன். அக்காலத்தில் காஞ்சி நகரத்தில் புத்தப் பள்ளிகள் நூற்றுக்கு மேல் இருந்தன வென்றும் பௌத்த சன்னியாசிகள் அனேக ஆயிரம் இருந்தன ரென்றும் ஜைன ஆலயங்கள் பல இருந்தன என்றும் தன் நூலில் எழுதியிருக்கிறான். ஆகவே அக்காலத்தில் புத்த மதமும் ஜைன மதமும் மிகவும் பரவி இருந்ததென நிச்சயமாய்த் தெரிகிறது. அந்த சீன யாத்திரிகன் காஞ்சிக்கு வருவதற்கு முந்தி கனோஜ் நகரத்திற்குச் சென்று அவ்வூர் அரசன் ஹர்ஷனிடம் சிலகாலம் தங்கி

பல் வகைப்பட்ட சனங்கள், சாதியார்கள், குலங்கள் என்பவைகள் விருத்தியடைந்தமையையும் அழிவடைந்தமையும் விரித்துக் கூறும் நூல்களைப் படிப்பது உலக வாழ்விற்குப் பெரும்பயன் தருவதாகும்.

பண்டைக்காலத்து நிகழ்ந்த ராஜகாரியத்தைக் கூறுவதே சரித்திர மென்பர். சிலர் - இது சரியன்று; உண்மையாக நோக்கு மிடத்துச் சரித்திரம் முற்காலத்தில் உலகத்து நிகழ்ந்த சமயாபிருத்தி, சனாபிவிருத்தி, தனவிருத்தி, கல்வி விருத்தி, அரசியல் விருத்தி முதலிய சம்பவங்க ளெல்லாவற்றையுங் கூறுவதாகும்.

உலகத்திலிருந்த பெரியோரின் ஜீவ சரிதத்தைக் கூறுவது சரித்திரம் என்பாரும் சிலருளர்.

உலகத்து நிகழும் சம்பவங்களை அடியோடு மாறுவன வன்மையின் சரித்திரங் கற்பது மிக்க பயனுடைத்து முற்காலத்து நிகழ்ந்த சம்பவங்களே அதிகமாய் இக்காலத்தும் நிகழ்கின்றன. ஆகவே அக்காலத்துச் சம்பவங்களின் ஆக்கக் கேடுகளைக் கற்பதனால் நாம் அறிவுடையராகின்றேம். சரித்திரக் கல்வி இவ்வாறு நமது அநுபவத்தை விருத்திசெய்து மக்களையும் மற்றவைகளையும் பற்றி நாங் கொள்ளும் எண்ணங்களை வலியுறுத்துகின்றது.

கல்வியினால் வரும்பயன் இருவகைப்படும்—ஒன்று நமது உயிர் வாழ்க்கைக்கு, அன்றேல் உயிர் வாழ்வின் பொருட்டு மேற்கொண்ட தொழிலுக்கு உதவியாவது; மற்றொன்று நமது அந்தக்கரணங்களைத் தொழிற்படுத்தி அவைகளை வலியுறுத்துவது. தக்க முறைப்படி கற்றால் எல்லாக் கல்வியும்—சரித்திரக் கல்வி ஒன்று மாத்திரமன்று மற்றெவ்வகைப்பட்ட கல்விகளும் நமது அந்தக்கரணங்களை விருத்தி செய்வதற் கேதுவாகும். ஒரு கல்வி ஓரந்தக்கரணத்தையும், மற்றொன்று வேறோரந்தக்கரணத்தையும் வளரச் செய்து வலியுறுத்தி உலக காரியங்களை ஐயந்திரிபின்றி உணருமாறு அவைகளைப் பயிற்றுகின்றன. இங்கே சரித்திரங் கற்பதனால் வரும் பயனென்று சொல்லப்பட்



டது பெரும்பாலும் நமது உயிர் வாழ்க்கைக்கு உதவியாகும் தன்மையினை. அஃதாவது நமக்கு முன்னிருந்தோருடைய வாழ்வினையும் செயலினையும் நமக்கெடுத்துக்காட்டி இக்காலத்துள்ள மனிதரையும் மற்றவைகளையும் உள்ளவாறுணரத் துணைசெய்வதனை.

நமது காலத்தில் நிகழும் சம்பவங்களையும் நம்மோடுடாடும் மனிதரையும் பற்றி நாங் கொள்ளும் எண்ணங்கள், நமக்குள்ள விருப்பு வெறுப்புக்களாலும் கண்ணோட்டத்தினாலும், மிகவும் உண்மைக்கு மாறாகவிருக்கும். நெடுங்காலத்துக்கு முன்னிருந்த மனிதரையும் அவர்களுடைய செயலையும் எடுத்துக் கூறும் சரித்திரங்களில் இந்த விருப்பு வெறுப்புக்கள் செல்வதற்கிடமில்லை. அதனால் அவர்களைப்பற்றி நாமடையும் அபிப்பிராயம் அதிகம் உண்மைக்கு மாறாக இருக்கமாட்டாது. சரித்திரத்தை முற்காலத்து நிகழ்ந்த ராஜகாரியங்களின் வரலாறென்று ஓராசிரியர் கூறுவர். சரித்திர நூலார் கூறும் ராஜ காரிய வரலாற்றில் கட்சி பேதங்களாலுண்டாகும் பொய்ம்மையும் பொறாமையும் ஒழிக்கப்பட்டு, மனிதர்களும் அவர்கள் செயல்களும், உள்ளது உள்ளபடி காணப்படும்.

சரித்திரத்தை முற்காலத்து ராஜ காரியங்களின் வரலாறென்று சொல்வது சரியன்று. அது கூறுவது கட்சி பேதங்களின் வரலாறென்று சொல்வது சரியன்று. அது கூறுவது கட்சி பேதங்களின் வரலாறன்று; மக்கட் கூட்டத்தின் வரலாறு. உண்மையாகப் பார்க்குமிடத்து சரித்திர நூலாசிரியரின் கடமை முன்னிருந்த அரசர்களின் செயலையும் அவர்களின் வைபவங்களையும், அவர் பொருத போர்களையும், கூறுவதன்று; பின்னையென்னையெனின் முன்னிருந்த மனிதரின் வாழ்வையும், செயலையும், கல்வி, செல்வம், சமயம், ஜனசம்சர்க்கம், கைத் தொழில், சில்பம் முதலியவைகளில் அவர்களடைந்த விருத்தியையும் எடுத்து விளங்கக் காட்டுவதேயாம். சரித்திரத்தைக் கல்வி கேள்வி வீரம் முதலியவற்றால் பெரியோரின் சரிதம் என்று கூறுவதும் சரியன்று. சரித்திரம் இப்பெரியோர்களின் சரித்திரத்தை மாத்திரமன்று, ஆதி தொட்டு உலகத்து நிகழ்ந்த

ஒழுக்க வழக்கங்களை எல்லாம் உள்ளது உள்ளபடி கூறவேண்டும்.

இவ்விதமாக எழுதப்பட்ட சரித்திர நூல்களைக் கற்பதனால் பெரும் பயனுண்டு. மக்கள் படும் வருத்தங்களும் துன்பங்களும் ஆசைகளும் முதலாகிய உலக வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் காலத்துக்குக் காலம் மாறுவனவல்ல. முற்காலத்தில் நிகழ்ந்தவைகளே பிற்காலத்தும் நிகழுகின்றன. அவைகளின் ஆக்கக் கேடுகளால் நாம் இக்காலத்துச் சம்பவங்களின் ஆக்கக் கேடுகளை யறிந்து கொள்ளலாம். இந்தவிதமாக சரித்திர நூல்களை நாம் சரியாக ஆராய்வோமாயின் அவை நமக்கு எரிச்சலோடும் மயக்கத்தோடும் சேராத பெரியதோருண்மை யநுபவத்தைப் பயக்கும். அநுபவம் இயற்கையிற் கொடிதாயினும் சரித்திர வாராய்ச்சியால் வருவது அத்தன்மைத் தன்று; அது கொடுமை தினையளவுமின்றி அறிவு பனையளவா யிருக்கும். பிறரடைந்த கஷ்ட நஷ்டங்களால் நாம் பேரிலாப மடைகின்றோம். உலகத்தில் நமக்கு முன் சென்றோருடைய அடிச் சுவடுகள் நமக்கு வழி காட்டிகளாக நின்று நம்மைப் பள்ளத்தில் வீழாமலும் மேட்டிலேறாமலும் விலக்குகின்றன. மனிதருடைய இயற்கை முன்னிருந்ததற்கு இப்போது சிறிதும் மாறுபடவில்லை. காலம் பலவிதமாக மாறுபாடடைய அதனோடு விகற்பமடையாது எப்போதும் ஒரியல்பா யிருப்பது அது வொன்றே. ஆகலான் முற்காலத்து நடந்த செயல்களிலிருந்தும் வர்த்தமான காரியங்களோடு பெரிதும் வேறு பாடில்லாத காரியங்களிலிருந்தும் இப்போதுள்ள நமது காரியங்களை நடத்தும் முறையை நாம் கற்றுக் கொள்ளலாம். முற்காலத்து வரலாறு கூறும் சரித்திரவாராய்ச்சியால் இப்போதுள்ள காரியங்களில் கணிகமாய் அவ்வப்போது நிகழ்வனவற்றினின்றும் நிலையுதலுடையவாயவற்றிற் கெப்போது மியல்பாயுள்ளவைகளை வேறு படுத்துணரலாம். உதாரணமாக முற்காலத்திருந்த கலாசாலைகளின் வரலாற்றையும் தேசங்கள் தோறும் அவைகளின் விருத்தியையும் தன்மையையும் மாற்றுதல் செய்தவைகளையும் இடையில் அழிவுறாது நிலைத்தவற்றின் சித்திக்குக் காரணமா





யிருந்தவைகளையும், இடையில் அழிவுறாது நிலைத்தவற்றின் சித்திக்குக் காரணமாயிருந்தவைகளையும், அவைகளடைந்த சித்தியின் தன்மையையும் கற்றறிதல் அவ்விதமான புதியதொரு கலாசாலை ஸ்தாபிப்பதற்கு இன்றியமையாத துணையாயிருக்கும். இனி, பேர்போன பிராஞ்சு தேசக் கலகத்திலிருந்து **Burke** முதலிய பெரும் புலவர்கள் எத்துணை புத்தி மதிகள் எடுத்துக் கூறினர். அத்தகையோர் துணையைக் கொண்டு வேறு மொரு பெரிய சம்பவத்தின் காரண காரியங்களைக் கற்றுணர்தல் பெரும்பயன்றராது போகாது. பிராஞ்சுக் கலகத்தால் நாம் அறிந்து கொண்டன பல; அவற்றின் உணர்ச்சி இக்காலத்திற் கின்றியமையாதது. அவற்றை யறிய வேண்டியோர் அவற்றினை யறியாது கழித்தல் அவர்க்குப் பெருங்கேடு பயக்கும்.

---

# நையாண்டி

## [திருக் கபசம் எழுதியது]

## "அரஞ்செய விரும்பு"

பூச்சாண்டிகளும் பேச்சாண்டிகளும் வில விலத்து நடுங்கிப் போகும்படிச் செய்த என்னுடைய அருமைக் குருவாகிய பெரிய நையாண்டி, ஒரு நாள் என்னை நோக்கி, "அரஞ்செய விரும்பு" என்று சொல்லி, இந்த வாக்கியத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்படி கட்டளை யிட்டார். அவருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு, இரவு பகலாய் அவர் சொன்ன வாக்கியத்தைப்பற்றி யோசனை செய்து பார்த்தேன். ஆனால் நான் சிந்தித்து அறிந்த விஷயங்களை என்னுடைய குருவுக்குச் சொல்லுமுன் அவர் இறந்துவிட்டார். ஆகையால் நான் ஆராய்ந்து கண்ட அரிய உண்மைகளைச் சேர்த்து ஒரு புஸ்தகமாக இப்பொழுதுதான் எழுதி முடித்திருக்கிறேன். இதைப் பற்றி இப்பொழுது பேசவேண்டிய அவசியம் என்னவென்று கேட்பீர்களாயின், சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கு நாட்

டிலே தற்காலத்தில் உயர்ந்த கல்வி என்று கருதப்படும் ஆங்கிலக் கல்வி கற்றுத் தேர்ந்தவர்களில் பெரும்பாலோர் காசுக்குதவாத பண்டங்களா யிருக்கிறார்கள். காணக்கிடையாத தங்கங்களா யிருப்பார்களென்று எண்ணித் தாய் தந்தையர் பட்டினி கிடந்து படிக்க வைத்த பிள்ளைகளெல்லாம் காசுக்குதவாத பண்டங்களாய்ப் போனார்கள். இவர்களில் எத்தனையோ பேர் பி. ஏ. பட்டம் பெற்றவர்களா யிருக்கிறார்கள். அதனால் என்ன பயன்? இவர்களுக்குச் சிறிதேனும் உலக அறிவு இல்லை; அநுபவமுங் கிடையாது. புஸ்தகப்படிப்பு என்னத்திற்குதவும்? "அதிகப் படிப்பு உடலுக்குச் 'சலிப்பு" என்றார் ஒருவர். அதிகப் படிப்பினால் சலிப்பு மாத்திரமன்றி, வலிப்பு வருவது முண்டு. இந்த வலிப்பு எப்படிப்பட்ட தென்பதை இப்பொழுது சொல்ல வேண்டியதில்லை. பி. ஏ. படித்தவர் பலர் பிழைப்பில்லாமல் திண்டாடுகிறார்கள். "பி. ஏ. என்று எழுத்துக்களுக்கு என்ன அர்த்தம்?" என்று ஒருவர் என்னைக் கேட்டார். "பி. ஏ. என்றால், பிழைக்க ஏலாதவன்" என்று நான் பதிலுரைத்தேன். நான் சொன்னது சரி என்று என்னைக் கேட்டவர் ஒப்புக்கொண்டார்.

இப்பொழுது கொஞ்ச நாளாய்த் தமிழ்ப் பல்கலைக் கழகமொன்று திரிச்சிராப்பள்ளியில் ஸ்தாபிக்க வேண்டுமென்று பேச்சு நடந்து வருகிறது. பல கலைகள் கற்பிக்கும் ஒரு பள்ளியைத் திரிச்சினாப்பள்ளியில் ஸ்தாபிப்பது மிகுந்த பொருத்தமாய்த்தான் தோன்றுகிறது. ஆனால், எந்தப் பல்கலைக் கழகமாயிருந்தாலும், பிழைக்க ஏலாத் பேர் வழிகளை உண்டாக்குவதாயிருந்தால், அந்தப் பல்கலைக் கழகம் நமக்கு வேண்டாம். பிழை நிறைந்த கல்வி கற்று மக்கள் பிழைக்க வழியில்லாமல் தவிக்கின்றார்கள். இவர்களில் பலருக்குக் கலப்பை என்றால் என்ன, கவலை என்றால் என்ன என்பதே தெரியாது. கலப்பை என்றால், "அது என்ன பை?" என்று கேட்கிறார்கள். மனக்கவலையன்றி வேறு கவலை அவர்களுக்குத் தெரியாது. இப்பேர்ப்பட்ட மக்களின் ஸ்திதியைக்கண்டு இரங்கி, 'அரஞ்செய இரும்பு' என்னும் புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன்.



நம்முடைய நாடு இப்பொழுது இருக்கும் நிலையில், தொழிற்கல்விதான் முக்கியமாய் வேண்டும் என்று எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் அரம் முதலிய ஆயுதங்களைக் குறைவின்றிச் செய்வதற்கு எந்த விதமான இரும்பு வேண்டும். அந்த இரும்பை எப்படிப் பக்குவப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் 'அரஞ் செய இரும்பு' என்னும் புஸ்தகத்தில் விசித்திரமாகவும் விஸ்தாரமாகவுங் கூறி யிருக்கிறேன். ஆயுதங்கள் செய்யக் கற்றுக்கொள்வது நம்முடைய முதற் கடமை. ஆயுதங்களில் 'அரம்' என்பது, செய்யக் கற்றுக்கொள்வதற்கு அவ்வளவு கஷ்டமானதன்று. அரம் என்றால் அறுக்குங் கருவி என்று பொருள். அரன் என்று சிவபெருமானுக்குப் பெயர் இருப்பது எதுபற்றி என்று தெரியுமா? அடியாருடைய பாவங்களை அறுப்பவன் என்ற பொருள் பற்றி. அரி என்ற பெயருக்கும் அதுவே பொருள். ஆகையால் அரம் என்ற ஆயுதம் பாற்கடல் பள்ளியாகிய பரந்தாமனோடும், கைலைமலையாளியாகிய பரமசிவனுடனும் ஒன்றாக வைத்துப் பேசக் கூடிய பெருமையை யுடையது. அரஞ் செய்யக் கற்றுக்கொண்டால், நம்முடைய பிழைகள், குற்றங்கள், தவறுகள் எல்லாம் அறுந்துபோகும். ஆகையால் ஆத்திச்சூடியில், 'அறஞ் செய விரும்பு' என்ற வாக்கியம் எப்படி முதலில் இருக்கிறதோ, அப்படியே 'அரஞ் செய இரும்பு' என்ற என்னுடைய புஸ்தகம் எல்லா புஸ்தகங்களிலும் முதலாயிருக்கிறது. இதில் இரும்பை உருக்குவதைப்பற்றி வெகு உருக்கமாகவும், இரும்புக்குச் சுருக்குக் கொடுப்பதைப்பற்றிச் சுருக்கமாகவும், இரும்பைக் காய்ச்சுவதைப்பற்றிப் பேசும்போது படிப்போருடைய மனம் கொழுந்துவிட்டு எரியும்படியாகவும் எழுதியிருக்கிறேன். இதைப் படிப்பவர்களுடைய தலை இரும்பாகிவிடும் என்று கூடப் பயப்படும்படியான அவ்வளவு சங்கதிகள் இருக்கின்றன. இரும்பைப்பற்றிப் பல நூல்களில் சொல்லியிருக்கிறதை எல்லாம் ஒன்றாய்த் திரட்டிச் சம்மட்டி கொண்டு அடித்து விரித்ததுபோல் விரித்திருக்கிறேன். இன்னும் விரிக்க இடம் போதாது. கிரந்த கர்த்தாவாகிய நானே இந்தப் புத்தகத்தின்

பெருமையைப் பற்றிப் பேசுவது நன்றாயில்லை. அதிகமாய்ப் பேச என் மனம் நாணுகிறது. எனக்கு எவ்வளவு நாணயமிருக்கிறதோ அவ்வளவு நாணமும் உண்டு. ஆனால், ஒருவன் எப்பேர்ப்பட்ட இரும்புத் தலையனானாலும் நான் எழுதிய புஸ்தகத்தைப் படித்துக் கொஞ்சம் கையிருப்புத் தேடிக்கொள்ளலாம். இரும்பு இல்லாமல் இருப்பு வராது. வெள்ளைக்காரருடன் நமக்குச் சரி இருப்பு வேண்டுமானால், இரும்பு வேலையை உடனே ஆரம்பிக்க வேண்டும். இதை யறியாமல், சுயராஜ்ஜியக் கக்ஷிக்காரர், சுயேச்சைக் கக்ஷிக்காரர், ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர், ஆகிய எல்லோரும் சட்ட சபையில் இருப்பைத் தேடிக்கொண்டார்கள். சட்ட சபையில் இருப்புக் கிடைத்துவிட்டால் குடியிருப்பு உயர்ந்துவிடுமோ? ஒருகாலும் இல்லை.

நாடு செழித்து, நகரங்கள் தழைத்து, மக்கள் பிழைக்க வேண்டுமானால் சும்மா படிப்பதை விட்டு இரும்படிப்பதைத் தொடங்கவேண்டும்.

—தமிழ்நாடு

---

# சிவஞான போதக்கருத்து

## இரண்டாவது சூத்திரம்

### இரண்டாவது அதிகரணம்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

(முன் கூகூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

58. சூத்திரத்திற் கூறியபடி இரண்டாவது அதிகரணம் மேற்கோள் "ஆணையின் இருவினையின்" என்பது. ஆசிரியர் அதனைச் சிறிது விரித்து "இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையில் வரும் என்று கூறுகின்றார்.

59. ஆசிரியர் முதலாவது அதிகரணத்தில் முதல்வன் உயிரின் பொருட்டு ஐந்தொழில் செய்யுங்கால் மூவகை நிலைகளை உடையவனாகின்றான் எனக் கூறி இரண்டாவது அதிகரணத்தில் அவ்வாறு ஐந்தொழில் செய்யும் நிமித்தகாரணனாகிய முதல்வன் உயிர் செய்த இருவினையையும் அந்த இருவினையை உயிருக்குக் கூட்டுவிக்கும் தனது மறைப்பு வலியையும் துணைக்



காரணங்களாகக் கொண்டு செய்கின்றான் என்று கூறுகின்றார். அதிகரண இயைபு இதனால் விளங்கும்.

60 மேற்கோள்களிலுள்ள சொற்கள் விளக்கம். "இவ்வான்மாக்களுக்கு', என்பது இவ்வுயிர்களுக்கு. இருவினை உயிர்களுக்கே என்பது தெளிவாய் அறியக் கிடந்த தொன்றாயினும் இருவினை ஈட்டுதலும் நுகர்தலும் புத்திதத்துவத்திற்கே அல்லாமல் உயிர்களுக்கு இல்லை எனக் கூறும் சாங்கியர் கொள்கையையும் உடலுக்கே என்று கூறும் உலோகாயதர் கொள்கையையும் மறுத்து அவ்வையங்களை நீக்குதற் பொருட்டு ஆசிரியர் "இவ்வான்மாக்களுக்கு" என்று வெளிப்படையாகக் கூறினார். இருவினை என்பது நல்வினை தீவினை. வினை என்பது செயல். அஃது இங்கே செயலின் விளைவை (result of action) க் குறிக்கிறது. நல்வினை அறத்தையும் தீவினை மறத்தையுங் குறிக்கின்றன. இருவினை என்பது அறம் மறங்கள் (புண்ணிய பாவங்கள்) ஆகும். இருவினை முதல்வன் ஆணையில் வருதல் என்பது முதல்வன் உயிர்கள் செய்த அறம் மறங்களை அறிந்து அவ்வறம் மறங்களின் பலன்களாகிய இன்ப துன்பங்களை நுகர்தற்கு ஏற்றதாயுள்ள உடல் முதலியவைகளைப் படைத்து அவற்றில் அவ்வுயிர்கள் பொருந்துமாறு செய்தல் ஆகும்.

61. வினை உண்டாகும் முறைமையும் அதன் பாகுபாடுகளும்: வினையானது மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு அத்துவாக்கள் (வழிகள்) இடமாக உள்ளம் நா உடல்களால் (மனம் வாக்குக் காயங்களால்) செய்யப்படுவது. ஒருவன் தனது உள்ளத்தால் பிறருக்கு நல்லன நினைத்தலும் வேட்டலும் உள்ளத்தாற் செய்யும் நல்வினையாம்; தனது நாவால் பிறருக்கு இன்னுரை பகர்தலும் உண்மை உரைத்தல் முதலியன செய்தலும் நாவினாற் செய்யும் நல்வினையாம்; தனது உடல் முயற்சியால் பிறருக்கு நல்லுதவி புரிதல் உடலாற் செய்யும் நல்வினையாம். அவ்வாறே அவன் தனது உள்ளத்தாற் பிறருக்குத் தீயன நினைத்தலும் வேட்டலும் உள்ளத்தாற் செய்யும் தீவினையாம்; தனது நாவால் பொய்யுரை பகர்தலும் கொடுஞ்

சொற்சொல்லுதல் முதலியனவும் நாவாற் செய்யும் தீவினையாம்; தனது உடல் முயற்சியால் பிறருக்குக் கேடு செய்தல் உடலாற் செய்யும் தீவினையாம். இவ்வாறு அவன் உள்ளம் நா உடல்களால் நினைவு வேட்கை செயல்களாகச் செய்யும் நற்செயல்கள் தீய செயல்கள் ஆகிய நல்வினை தீவினை (இருவினை)கள். பருமையாய் (தூலமாய்)த் தெரியும்படியாயுள்ளன. இந்த இருவினை இனி வரும் பிறவியிற் பலனைக் கொடுத்தலால் வருவினை (ஆகாமியம்) என்று கூறப்படும். இந்த வருவினையாகிய நற் செயல் தீச்செயல்கள் செய்யப்பட்டவுடனே பருமை நிலையில் அழிந்து மறைந்து நுண்ணியவினை (சூக்குமகன்மம)யை அடைந்து அது பயன்படுங் காலம்வரை புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடக்கின்றது. எந்த அறவினையும் ஒருவனுடைய சத்துவ குணம் மேலிட்ட புத்தியிற் றுணியப்பட்டுப் பின் செய்யப்படுகின்றது; மறவினையானது அவனுடைய ராசத தாமத குணங்கள் மேலிட்ட புத்தியிற் றுணியப்பட்டு செய்யப்படுகின்றது. வினையீட்டத்துக்குப் புத்தி தத்துவமே இடமாயுள்ளது. அழிப்புக் காலத்தில் புத்தி தத்துவ மழிந்து மாயையிலொடுங்கும்பொழுது வினையும் அம்மாயையைப் பற்றிக்கொண்டு நின்று மீளப்படைப்புண்டாகுங் காலத்தில் உடல் முதலியவற்றிற்கு ஏதுவாய் வரும். புத்திதத்துவம் இல்லையாயின் வினை ஈட்டமும் ஈட்டப்பட்ட வினை நுகர்தலும் இல்லனவாய் விடும். இவ்வாறு பயன்படும் வரையும் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையில் நுண்ணிய நிலையிற் கிடக்கும் நல்வினை தீவினை (நற்செயல் தீயசெயல்கள்) அறம் மறங்கள் (புண்ணிய பாவங்கள்) ஆக மாறுகின்றன. ஒருவனாற் பல பிறவிகளில் ஈட்டப்பட்டு மாயையிற் கட்டுண்டு தொகுதியாய்க் கிடக்கும் அறம் மறங்கள் தொகுவினை (சஞ்சிதவினை) என்று கூறப்படும். இவ்வாறு திரண்டுதொகுத்த (சேர்த்த) இருவினையிலே பக்குவப்பட்டு ஒரு பிறவியிலே நுகர்தற்குத் தகுதியாயுள்ள வினைப்பகுதியானது நுகர்வினை (பிரார்த்தவினை) என்று கூறப்படும். இந்த நுகர்வினையின் பயனே உலகில் நுகரப்படும் இன்ப துன்பங்கள். நுகர்வினையை நுகர்தற்கு ஏற்ற ஒருடல் முதலிய கருவிகளுடன் ஒரு



வன் உலகில் வந்து பிறக்கின்றான். எடுத்த உடலில் வினைக்குத் தக்கவாறு இன்பதுன்பங்கள் வந்து பொருந்துதல் மிக நுண்ணிதாய் (அதிசூக்குமமாய்) இருக்கும். ஒருவன்தான் உள்ளம் நா உடல்களாற் பருமை நிலையிற் செய்த நற்செயல் தீச்செயல்கள் என்னும் வருவினையானது பின் அவன் அவைகளை உள்ளத்திலெண்ணி (மனதில் சிந்தித்து) புத்தியில் துணிந்து (நிச்சயித்து) அறிந்த அறிவினாலே நுண்ணிய நிலையில் அறம் மறங்கள் ஆக மாறி முன் இவ்வாறு சேர்ந்து புத்தி தத்துவத்திற் கட்டுண்டு கிடக்கின்ற அறம் மறங்களுடன் ஒன்று சேர்ந்து தொகுவினை (சஞ்சிதவினை) என்று பெயர் பெறுகின்றது. இந்தத் தொகுவினையாகிய அறம் மறங்களிற் பக்குவப்பட்டு ஒருடலில் நுகர்தற்கு ஏற்றதாயுள்ள வினைப் பகுதி நுகர்வினை (பிரார்த்தவினை) எனப் பெயர் பெற்று அவன் முயற்சியால் உலகிற் செய்யும் நற்செயல் தீச்செயல்களின் வழியே இன்பதுன்பங்களாக வந்து பொருந்துகின்றன.

இதனால் ஒருவன் உலகில் அடையும் இன்ப துன்பங்களுக்கு அவன் முன் செய்த நற்செயல் தீச் செயல்களே காரணமாயுள்ளன என்பதும் அந்த நற்செயல் தீச் செயல்களின்பயனை அவன் நுகர்தல் தப்பாது என்பதும் பெறப்படுகின்றன.

62 வினை நுகரப்படும் காலவரிசை பொதுவாக ஒருவன் ஒரு பிறவியிலே செய்த வினையின் பயனை பின் வரும் பிறவிகளில் நுகர்வான். நல்வினையையாவது தீவினையையாவது ஒருவன் ஒரு பிறவியிலே மிக ஏற்றமாகச் செய்வானானால் அவ்வினையின் பயன் அவனுக்கு அதே பிறவியில் வரு

(ஆகாமியம் சஞ்சிதம் பிரார்த்தம் என்பன வடமொழிச் சொற்கள். ஆகாமியம் வருதல் என்று பொருள்படும். ஆகம என்ற அடிச்சொல்லிலிருந்து வந்தமையால் வருவினை என்று தமிழில் குறிக்கப்பட்டது. சஞ்சிதம், தொகுத்தல் (To collect) என்று பொருள்படும் (சஞ்சி) என்ற அடிசொல்லிலிருந்து வந்தமையால் தொகுவினை என்று தமிழில் குறிக்கப்பட்டது. திரள்வினை என்றும் சொல்லலாம். பிரார்த்தம் தொடங்குதல் என்று பொருள்படும் (ப்ராரப்) என்ற அடிசொல்லிலிருந்து வந்தமையால் நுகர்வினை (அதாவது நுகரத்தொடங்கும் வினைஎன்று குறிக்கப்பட்டது.) துய்வினை என்றும் சொல்லலாம்.

# திருஞான சம்பந்தர் — செந்தமிழ் நாடகம்

[திரு. S. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்கள்]

(௭௱௪௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

**திருஞான சம்பந்தர்:**—மன்னவ, மனம் வெறுக்க! வெகுளுதல் ஒழிக! எப்படியும் நன்னெறிப்படுத்தப் பார்ப்போம். நன்றாகக் கற்றிருந்தும், பொறாமையால், தங்களையும் மறந்தன்றோ பேசுகின்றார். அவர்கள் நிலை கண்டு நாம் இரங்க வேண்டுமேயன்றி, வேறென் செய்வது?

அமணர்களை நோக்கி

அன்பர்களே,

இன்னும் உங்கள் விருப்பம் எதுவோ, அதுவே செய்வோம். மனங் கலங்காதீர்கள். ஆர அமரச் செய்வோம். மனதிலுள்ள பொறாமையை விட்டு விடுங்கள். சொல்லுங்கள் உங்கள் எண்ணம்.

**அமணர்கள்:**—எங்களுக்கென்ன மனக்கலக்கம். என்ன நாங்கள் தோற்றுவிட்டோம். போகட்டும், இன்னும் ஒரு முறை வாது செய்வோம்.

**அமணர்கள்:**—நாமிருவரும், நம் நம் பொருளுண்மை ஏட்டில் எழுதி, ஓடும் நீராற்றில் இடவேண்டும். ஒழுக்கொடு செல்வது நற்பொருளன்று. எதிரேறிச் செல்லும் ஏடே வெற்றி யுற்றதாகும்.

**திருஞானசம்பந்தர்:**—நன்று. அவ்வாறே செய்வோம். நீங்கள் எவ்வாறாயினும் மேலேற வேண்டுமென்பதே என் நோக்கம்.

(அமைச்சனார் விரைவில் இவர்கள் நடுவே வந்து நின்று)

**குலச்சிறையார்:**—(அமணரை நோக்கி) ஐயா,

ஏதாவது ஒரு உடன்படிக்கை செய்துதான், இந்த வாது நிகழ்த்தவேண்டும். ஒன்றுமில்லாது, சும்மா சும்மா இப்படிச் செய்துகொண் டிருந்தால் தெளிவு தான் எப்போ ஆகும்?

**அமணர்கள்:**—(குலச்சிறையாரை நோக்கி வெகுளியோடு)

ஏ! அறமிலி!

நீ ஏன் கேட்பது? இதோ வேந்தன் இருக்கின்றான். உரியது புரிவான். நாங்கள் வாதில் தோற்றால், அவனே உங்களைக் கழுவில் ஏற்றுவன். நீ பேசாது போ.



**மன்னவர்:**—(வெகுண்டு கூறும் அமணரை நோக்கி)

முடத்தெங்கனையீர்,

வெகுளற்க, சிறிது நினைத்துக்கூறுங்கள். "எண்ணித் துணிவது கருமம்" என்பது மறவற்க. நீங்கள் சீற்றத்தால் இவ்வாறு சொல்லுகின்றீர்கள். மன ஒருமையுற்று, இருந்து, சொல்லுங்கள். (சிறிது நேரங் கழித்து) என்ன உங்கள் எண்ணம்? நீங்கள் சொல்லியபடிதானா? தோற்றால், உங்களைக் கழுவேற்ற வேண்டுவதுதானே? நீங்கள் எப்படியும் வெற்றி பெற்று விடுவீர்கள். இதுவரை தோல்வி இல்லைதானே—

**அமணர்கள்:**—நாங்கள் சொன்ன சொல் மாற்றுவதன்று. ஒரு சொல்லாளர்கள். இந்தச் சைவர்கள்போல் நிலைமாறல் எங்கட்கில்லை.

**மன்னர்:**—சரி: பின், எழுங்கள் யாவரும் ஆற்றங்கரை செல்லுவோம்.

## ஆறும் அங்கம் ஆறுங்காட்சி:

**இடம்:**—வைகையாற்றங்கரை.

**காலம்:**—மாலைப்போது.

**நடர்:**—மன்னவர், திருஞான சம்பந்தர், மங்கையர்க் கரசியார், குலச்சிறையார், சிவனடியார்கள், ஊரார்கள், அயலூருள்ளார்கள் முதலியோர்.

திருஞான சம்பந்தர் முத்துச்சிவிகையிலும், மன்னர் குதிரைமீதும், மற்றும் அம்மையார், அமைச்சர் முதலியோர் தத்தம் ஊர்திகளில் ஆற்றங்கரை வந்து நெருங்கினர். ஊர் முழுவதும் மிக்க ஆத்திரத்தோடு வந்து குழுமினார்.

**மன்னவர்:**—(அமணரை நோக்கி).

அறமறையும் அமணரே,

இது மாரிகால மாதலால், வைகையிலும், பெருக்கு மிகுதியாகத் தானிருக்கின்றது. உங்கள் விருப்பமும், இப்படி நீர் ஓட்டமாக இருக்க வேண்டும் என்பது தானே. நல்லது நீங்

சூழ்வும் கொண்டார்கள். அவர்கள் வாக்குப்படியே முறை செய்து விடுக.

**திருஞான சம்பந்தர்:**—"கொலையிற் கொடியாரை வேந்தொறுத் தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்."

வேந்தன் முறை செய்தலைத் தடுத்தல் முறையன்று (என்று வாளா இருந்தார்).

**குலச்சிறையார்:**—அமணம் சூழ்வினை நிறைவித்தார்:

அடிகளே,

நீங்கள் உங்கள் வாயால் கெட்டீர்கள். நீங்கள் சொல்லிய படியே செய்யுங்கள்.

**காவலாளரை நோக்கி**

தண்டலாளர்பால் இவர்களை ஒப்புவிக்க; அரசன் ஆணைப் படி தண்டனை புரிக.

தண்டலாளர்கள் தண்டம் செய்தல்.

## ஆறும் அங்கம் - ஏழாம் காட்சி

**இடம்:**—மதுரைக்கோவில்

**காலம்**—: மாலைப்பொழுது

**நடர்:**—திருஞான சம்பந்தர் - மன்னவர் மங்கையர்க்கரசியார் முதலியோர்

யாவரும் கோவில் சென்றார்கள்.

**திருக்கோவில் முன்நின்று பெருமான் பாடிய பாசுரம்**

**திருச்சிற்றம்பலம்**

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே."

**மன்னவர் :**—சிவபெருமானை வணங்கி:—

திருவால வாயில் மேவு மன்னனே, அமணர் மாய்கையால் மயங்கி உன்னை அறிந்திலேன். என் பிணி தீர்த்து, ஆட் கொள்ள அருட் பிள்ளையாரைத் தந்தனை. யாவரும் நீறு பூசி நின்றனர். யாவரும் மகிழ்வொடும் தங்கள் தங்கள் இருப் பிடம் சேர்ந்து மகிழ்ந்திருத்தல்.

முற்றும்.

Printed by A. Rangaswamy at the Progressive Printers,
2-17, Coral Merchant Street, Madras, & Published by V. Subbiah,
for The S. I. S. S. W. P. Society, Tinnevelly, Ltd., Madras.

Vol VIII 1930—1931



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

## எட்டாம் சிலம்பு

இதழாசிரிய கூட்டத் தலைவர்:

கா. சுப்பிரமணியபிள்ளை

எம்.ஏ.,எம்.எல்., அட்வகேட்.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
லிமிடெட்

சுக்கிலஞு - பிரமோதூதஞு

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Tinnevelly & Madras

All Rights Reserved]

[Price Rs. 4-8

கோடுக்கூர் கோவிந்தன்:—காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A., ௧௮௫.

சரித்திர நூல்களைக் கற்பதனால் வரும்பயன்:—திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், ௭௫௧.

சிறுமணித்திரள்:—திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் B. A., L. T., ௫௪௫.

சில கொடையாளிகள்:—திரு. எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் B. A., L. T., ௨௧௯.

சிவஞான போதக் கருத்து:—திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A., ௧௯௮, ௩௱௮, ௩௨௪, ௪௨௮, ௫௱௨, ௫௬௰, ௬௨௯, ௬௮௬, ௭௫௮.

சிவராத்திரி புராணம்:—S. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் M. A., L. T., ௯௰.

சிவநெறி மாண்பு:—ரத்னபுரி K. சிதம்பர நாதனவர்கள், ௨௩௨, ௨௭௩.

சிவலிங்கம்:—திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் பி. ஏ., ௩௮, ௮௯.

சூது:—காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள் B. A., ௩௱௪.

செந்தமிழ்ச் செல்வி வாழ்த்து:—திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளையவர்கள், ௫௮.

செவ்வந்தி மாநகரக் கல்லூரிப்பாட்டு:—ஸ்ரீ சுவாமி வேதாசலமவர்கள், ௭௱௬.

சேக்கிழார் திருவவதாரஞ் செய்த இல்லம்:—சாத்தூர் வழக்கறிஞர் திருவாளர் டி. எஸ். கந்தசாமி முதலியார் அவர்கள், B. A., ௨௧௨.

சைவ சமயம்:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள், ௪௮௪: ௫௧௮.

சைவ இளைஞர் மகாநாடு தலைவர் பேருரை:—திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம். ஏல்., ௨௬௰.

ஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் சரித்திரச் சுருக்கம்:—௬௯௮.

ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் அஷ்டோத்ர சதநாமாவளி:—திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளையவர்கள், ௪௪௫

தக்கயாகப் பரணியைச் சீகாழியார் போற்றி வந்தது:—திரு. ப. அ. முத்துத் தாண்டவராயபிள்ளையவர்கள், ௱௮௨.

தஞ்சை சீனிவாசபிள்ளை தமிழ் வரலாற்றின் ஆராய்ச்சி:— ௬௱௰, ௬௭௭.





தமிழ்ச் சித்தவைத்தியம்:—விருதை சிவஞானயோகிகள், ௨௫௨, ௨௮௫.

தலைமைப் பேருரை:—திரு C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், ௭௩௰.

தமிழும் அறிவியல் நூல்களும்:—திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L., ௱௩௩.

தலைமைப் பேருரை:—திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ௰, ௬௮.

திருச்செந்தூர்த் தண்டகமாலை:—ஆ. திரு. இராமலிங்கம் பிள்ளையவர்கள், ௱௬௫.

திருஞான சம்பந்தர் - செந்தமிழ் நாடகம்:—திரு. S. முத்துக் குமாரசாமியா பிள்ளையவர்கள் ௱௪௭, ௨௪௰, ௩௧௨, ௩௬௧, ௫௱௮, ௫௭௧, ௭௯௪.

திருஞான சம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு:—சீகாழி வித்வான் திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்கள், ௫௫.

திருமந்திர உரை:— ௧௨௯.

திரைகடல் ஓடியுந் திரவியம் தேடு:—திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், ௱௰.

திருவருட்பா: ௩௭௮

திருவாசகத்திற்கு உரை எழுதலாமா:—மறைமலை யடிகள், ௬௱.

திருவாசகம் திருப்படையாட்சி உரை:—திருத்தணிகை விசாகப் பெருமாளையர், ௪௪௯.

தெளிவுடைமையும் மடியின்மையும்:—திரு. சிவ. கண்ணுசாமி B. A., ௫௱௭.

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி:— ௬௩௭

தேவார உரை:— ௧, ௬௫, ௧௯௩, ௨௫௭, ௩௨௧, ௩௮௫, ௫௧௩, ௫௭௭, ௬௪௧, ௭௱௫

நக்கீரனார் தெய்வப் புலமை மாட்சி:—சுவாமி வேதாசலம் அவர்கள், ௪௱, ௪௯௩, ௫௩௧.

நட்பும் அடக்கமும்:—சீகாழி. சிவ. கண்ணுசாமி B. A., ௩௫௪.

நம்பியாண்டார் நம்பிகள் சரித்திரம்:—திரு. S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B. A., L. T., ௪௫௧.

நாமகள் தாலாட்டு:—திரு. க. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், ௪௨, ௯௮

நாமகள் திருப்பள்ளி யெழுச்சி:—யாழ்ப்பாணம் திரு. க. சோம சுந்தரம் பிள்ளையவர்கள், சசஉ.
நவராத்திரியும் சரஸ்வதி பூசையும் உண்மை விளக்கம்:— சுகக.
நால்வர்களும் கல்வெட்டுகளும் I திருஞானசம்பந்தர்:—திரு. அட்வகேட் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்: நிஎஅ, சுநிஉ.
* ஷை II அப்பர்சுவாமிகள்:—திரு. அட்வகேட் C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், எசச
நையாண்டி:—கபசம், எ[illegible]
பண்டைத்தமிழ்ச் சொற்கள்:—திரு. ஙா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A., ாசு, களசு, உஉகூ, உகூஉ, [illegible], சகூய, நிஙகூ, நிகநி, கூசகூ, எஉநி.
பரோடாவும் நூல் நிலைய இயக்கமும்:— நிசுஎ.
பள்ளி யெழுச்சி:—காழி. சிவ. கண்ணுசாமி, B. A., சவ[illegible].
பிணியாளி:—அ. சிதம்பரநாதன், B. A., ாசக.
பிரமோதூத வருடப பஞ்சாங்க மறுப்பு:—திரு. த. முத்துக் கருப்ப பிள்ளையவர்கள், ங[illegible]அ.
புகழேந்தி செந்தமிழ் நாடகம்:—திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள், கூங, களசு.
புறநானூறும் பழந்தமிழ் நாடும்:--இளவழகனார், யகூ
புறநானூற்றிற் கண்ட சில பழைய வழக்குகளும், வரலாறுகளும்:—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், ஙச.
புஷ்பங்களும் அவற்றின் தொழிலும்:—Prof: P. சுந்தரம் பிள்ளையவர்கள் M. A., ககச, கநிஅ.
பெண்மக்களும் உடற் பயிற்சியும்:—திரு. ஆவி. சித. சொக்க லிங்கன் அவர்கள் [illegible]
பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய வரி:— திருவாளர். அ. மு. சரவண முதலியார் அவர்கள், [illegible]
பெருமிழலைக் குறும்ப நாயனாரது திருப்பதி:—கும்பகோணம் T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள், [illegible]
மதிப்புரைகள்:— கூச, ஙஅச, சசஅ, [illegible]
* மணிவாசகரும் கண்ணப்பரும்:—தமிழ்ப்புலவர். திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள், சநிச, [illegible] கூசச, [illegible]



மாமும் புலவரும்:—திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள், B. A., L. T., எகூ.
மாயாவதி:—திரு. எம். எஸ். வேலாயுதம், நிகூ. கஉக.
யாப்பிலக்கணம்:—தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், B. A. ஙஅஅ.

## படங்கள்

க. நாமகள் க.
உ. திருமகள் சநி.
ங. கண்ணப்பர் ாசச.
ச. திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல்., ாகூங.
நி. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், உநிஎ.
சு. திருச்சிமலைக்கோயில், ஙஉஉ.
எ. பூண்டி அரங்கநாத முதலியார், M.A., ஙஅநி.
அ. திருவண்ணாமலைக் கோயில் சசகூ.
கூ. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள், நிகங.
ய. பரோடா சென்ட்ரல் லைப்ரெரி, நிஎஅ.
கக. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள், ாசக.
கஉ. திருவானைக்காத் திருக் கோயில் எாநி

---

# அறிவிப்பு

இச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் இதுகாறும் அச்சிடப் பெற்ற 180 நூல்களும், வேறு வெளிப் பதிப்பு நூல்களும் முறையே தொகுப்பாய்க் கிடைக்கப் பெறும். நூல் நிலையங்கட்கும், பரிசளிப்புக்கும், கல்லூரிகட்கும், வேண்டிய எல்லாவகைத் தமிழ் ஆங்கில நூல்களும் ஒரு சேரக் கிடைக்கப்பெறும்.

விரிவான புத்தக விலைப்பட்டி இனமாய் அனுப்பப்படும்.

---

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத்தெரு. சென்னை.

# செந்தமிழ்ச் செல்வி

## பைண்டுத் தொகுதிகள்

இது காறும் வெளிவந்த எட்டு ஆண்டு செல்வித் தொகுதிகள் அழகியனவாய்க் கட்டிடஞ் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன்கண் அரும் பெருந் தமிழ்ப் புலவர்களால் எழுதப்பட்ட தமிழ்இலக்கணம், இலக்கியம், மொழியாராய்ச்சி, சைவசமயம், திருமுறை, பிற சமயங்கள், புராணம், இதிகாசம், நுண்ணூல் (science) களின் சாரம், வியப்பு மொழிகள் (wits & Humours), உவகை மொழிகள், சீர்திருத்த அறிவுரைகள், அறவுரைகள் முதலியன வெளிவந்திருக்கின்றன. தமிழ்க் கல்வி விரும்புவார் இத் தொகுதிகளை ஒரு முறை கற்பின் சிறந்த புலமை எய்துவர் என்பது திண்ணம்.

நூல் நிலையங்கட்கு
இன்றியமையாது வேண்டப்படுவனவாகும்.

| | | |
|---|---|---|
| 1 முதல் 4 தொகுதிகள் தனித்தனி | விலை ரூ | 3—8—0 |
| 5 முதல் 8 ,, | விலை ரூ | 4—8—0 |
| 8 தொகுதிகளுக்கும் மொத்த | விலை ரூ | 28—0—0 |
| நமது கையொப்ப நண்பர்கட்கு | விலை ரூ | 26—0—0 |

செந்தமிழ்ச் செல்வி நிலையம்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

தமிழ்நாடு ...
199642
சென்னை 600 00..

# புதிய கழக வெளியீடுகள்

1. ஜிஞ்ஞேவாவீரன் அல்லது கோலம்பக வரலாறு:—

இது கழகத் தமிழ்ப் புலவராயிருந்தவரும் ஆசிரியர் மறைமலையடிகள் மாணுக்கருமாகிய திரு. T. S. பாலசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப் பெற்றது. எளிய இனிய உரைநடை கொண்டு திகழ்வது. இது கற்பவர்க்கு மனவெழுச்சி தருவதோடு சோம்பல் தவிர்த்து முயற்சியிற் புகுத்திப் புகழை நல்கும். அழகிய பதிப்பு விலை அணு 6.

2. நளாயனி அல்லது நங்கையர்க்கரசி:—

இது பாலக்காடு விக்டோரியா காலேஜ் தலைமைத் தமிழாசிரியர் திரு. A. நடராஜ பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. நளாயனியின் வரலாறு பாரதக் கதையில் கூறப்பட்டிருப்பினும், இந்நூல் புதிய முறையில் சிறந்த பழமொழிகளைப் பிணைத்தும் முன்னோர் நூல்களிற் பயின்றுவரும் அரும்பொருளடங்கிய சொற்றொடர்களை இடநோக்கி யமைத்தும் அழகுபட எழுதப்பட்டிருக்கின்றது. உளக்கவரும் நடையழகு வாய்ந்தது. இதன்கண் அருமொழி யகராதியும், பழமொழி யகராதியும், உபமான உபமேயங்களின் அகராதியும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இதன் விலை அணு 7

3. பத்துப்பாட்டில் ஒன்றாகிய முல்லைப்பாட்டு
நச்சினார்க்கினியருரையும் விளக்கமும்:—

இதனை யாவரும் எளிதிற் கற்றுப் பொருள் தெளியுமாறு பதவுரையும், ஆராய்ச்சியும், அருந்தொடர் அகராதியும் எழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. குறைந்த விலை அணு 10.

---

## வெளியார் பதிப்புகள்

முதற் குலோத்துங்க சோழன்:—

இது T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் எழுதியது. இச்சோழ அரசர் வரலாற்றைக் கற்குமுகத்தான் தமிழ்நாட்டின் பழைய வரலாறுகளையும் அறியலாம். கல்வெட்டுக்களின் துணை கொண்டு இஃதெழுதப் பெற்றனது. விலை அணு 12.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சைவசிகாமணிகள் இருவர்:— | | |
| நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும் | 1 | 0 |

குறைக்க விலைப் பதிப்புகள்:—

| | | | | |
|---|---|---|---|---|
| திருவாசக மூலம் | 0 2½ | சுந்தரர் தேவாரம் | 0 | 4 |
| ...ர் தேவாரம் கலிக்கா | 0 14 | தாயுமானவர் பாடல் | 0 | 4½ |